விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 210 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 01 திங்கட்கிழமை (17.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## இந்திய விஜயத்துக்கு முன்னதாக
# தமிழ் எம்.பிக்களுடன் பேசவுள்ள ஜனாதிபதி

### அதிகாரப் பகிர்வு தொடர்பில் எடுத்துரைக்கவுள்ளதாக கூட்டமைப்பு தெரிவிப்பு



(கொழும்பு)

**ஜனாதிபதி ரணில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்று மேற்கொள்ளவுள்ள நிலையில் நாளை தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.**

இச்சந்திப்பின்போது அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வழங்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளதாக சம்பந்தன் தலைமையிலான குழுவினர் 02

## ரணிலின் அழைப்பை நிராகரித்தது முன்னணி

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பு அழைப்பை நிராகரிப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி, நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

நாளை 18ஆம் திகதி பிற்பகல் 3 15

### கடவுச்சீட்டுக்காக ஜூனில்
## 29 ஆயிரம் பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள 51 பிரதேச செயலகங்களில் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட ஒன்லைன் மூலம் கடவுச்சீட்டைப் பெறுவதற்கு 29 ஆயிரத்து 578 பேர் இணையத்தில் விண்ணப்பித்துள்ளதாக பொது பாது 15

## சங்கிலியன் தோரண வாயில் திறந்து வைப்பு



15

## வவுனியாவில் குழு மோதல் ஒருவர் ஆபத்தான நிலையில்
### நால்வர் படுகாயம்

(வவுனியா)

வவுனியாவில் இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் நடந்த மோதலில் 5 பேர் காயமடைந்ததுடன், காயமடைந்தவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் உள்ள மோட்டார் சைக்கிள் 02

## தேங்காய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

இடைத்தரகர்கள் தேங்காய்களை அதிக இலாபம் வைத்து நுகர்வோருக்கு விற்பனை செய்வதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். 15

## வரலாற்றுச் சின்னங்களை பாதுகாக்க தவறிவிட்டோம்
### யாழ்.அரச அதிபர்



(கொழும்பு)

இன்றுள்ள சூழலில் வரலாற்று சின்னங்களுக்கு உருவங்கள் மாற்றப்படுகின்றன என யாழ்.மாவட்ட அரச அதிபர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார். 15

## மீண்டும் பெரமுனவுடன் இணையும் டலஸ் அணி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன்மீண்டும்இணைந்து கொள்ள டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விலகி சென்றவர்கள் தாராளமாக எம்முடன் இணைந்து கொள்ளலாம் என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

தெல்தெனியபகுதியில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற் கண்டவாறு 15

## யாழில் கோர விபத்து; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்.பலாலி வீதியில் கோண்டாவில் சந்திப் பகுதியில் நேற்றுக் காலை இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனு 02

## வடக்கில் உயர் சாதியினருக்கு எதிராக தாழ்ந்த சாதியினர் போராட வேண்டும்
### பிரிவினைவாதத்தை தூண்டும் சரத் வீரசேகர

(கொழும்பு)

வடக்கில் உயர் சாதியினர், தம்மைவிட தாழ்ந்த சாதியினரை மதிப்பதில்லை. இதுவும் ஒரு வகையான மனித உரிமை மீறலாகும். அவர்களும் இதற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடவில்லை. தமிழர்களை இலங்கை இராணுவம் பாதுகாத்துள்ளது.

ஆகவேஇனியாவதுஎன்னை இனவாதியாக சித்தரிப்பதை அனைவரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.


ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரச மரியாதையுடன் நகுலேஸ்வரக் குருக்களின் திருவுடல் தீயுடன் சங்கமம்





(யாழ்ப்பாணம்) ஈழத்தில் மூத்த சிவாச் சாரியாரும் பஞ்ச ஈச்சரங் களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரத்தின் ஆதீன கர்த்தாவுமாகிய நகுலேஸ்வரக் குருக்கள் நேற்று முன்தினம் தனது 98 வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அவரது இறுதிக்கிரியைகள் நேற்று நகுலேஸ்வர ஆலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றது.

அன்னாரின் திருவுடலுக்கு அரசியல் பிரமுகர்கள், சமயத் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் திருவுடலானது அரச மரியாதையுடன் ஊர்வலமாக வந்து கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்தில் 3 குண்டுகள் முழங்க தீயுடன் சங்கமமானது.

இதேவேளை சிவாச்சாரியாரின் மறைவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது இரங்கல் செய்தியை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (4-7)


## மணமகள் தேவை

**1990ல் பிறந்த உத்தரட்டாதி 4ஆம் பாதம், 7 இல் செவ்வாய், கிரகபாவம் 71 உடைய தேசிய கல்வியற் கல்லூரி யாழ்ப்பாணம், BA பட்டதாரி ஆசிரியருக்கு ஆசிரியர் தொழில் செய்யும் மணமகள் தேவை. வடமராச்சி விரும்பத்தக்கது.**

(C-6927)

**075 393 5227**
**077 879 8186**


# வெலிகண்டல் கமக்கார அமைப்பு தனி அமைப்பாக அங்கீகரிப்பு

கிளிநொச்சி கண்டாவளை கமக்கார அமைப்பின் உப அமைப்பாக செயற்பட்டு வந்த வெலிகண்டல் கமக்கார அமைப்பு கமநல சேவை நிலையத்தினால் தனியான அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேசத்தில் விவசாய செய்கைகளை விரிவுபடுத்தவும் விவசாயிகளுக்கான சேவைகளை விரைவாக பெற்றுக் கொடுக்கும் வகையிலும் கடந்த ஆண்டில் கண்டாவளை பிரதேசத்திற்கான தனியான கமநல சேவை நிலையம் உருவாக்கப்பட்டு சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனை அடுத்து கண்டாவளை பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுக்கான சேவைகளை சரியான முறையிலும் இலகுவாகவும் பெற்றுக் கொடுப்பதற்காக புதிய கமக்கார அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

கண்டாவளைப் பிரதேச கமக்கார அமைப்பின் கீழான உப அமைப்பாக இயங்கி வந்த வெலிகண்டல் உப அமைப்பு வெலிகண்டல்கமக்கார அமைப்பாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ் அமைப்பானது வெலிகண்டல் பகுதியில் உள்ள விவசாய காணிகளை உள்ளடக்கிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளதுடன் மானாவாரி காணிகளாக அமைந்துள்ள இக் காணிகளை எதிர்காலத்தில் நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் உள்வாங்கும் நோக்கிலே வயல்களுக்கான வாய்க்கால் வீதிகளை அமைத்தல் வாய்க்கால்களை அமைத்தல் கழிவு வாய்க்கால்களை அமைத்தல் போன்ற செயற்பாடுகளை இலகுவாக முன்னெடுக்கக் கூடிய வகையிலும் விவசாயிகளுக்கான சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கான வகையிலும் குறித்த கமக்கார அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-315)

## வடக்கில்...

அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்..

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் சிறுவர்களை போராளிகளாகவும் மக்களை பலியாட்களாகவும் பயன்படுத்திய போது என்னை இப்போது இனவாதியாக சித்தரிப்பவர்கள் கொழும்பில் சுகபோகமாக வாழ்ந்தார்கள்.

சிறந்த தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் என்னுடன் உள்ளார்கள். காரைநகர் பகுதியில் நான் பல ஆண்டுகள் சேவையாற்றினேன். எனது சேவைக்காலம் முடிவடைந்த போது என்னை பிறிதொரு பகுதிக்கு இடமாற்றம் செய்ய வேண்டாம் என தமிழ் மக்கள் அப்போதைய ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாத்திரமல்ல, கொழும்பு மாவட்டத்தில் உள்ள தமிழர்களும் என்னுடன் இணக்கமாக உள்ளார்கள். ஒரு சில பிரிவினைவாதிகள் தான் தங்களின் அரசியல் இருப்புக்காக என்னை இனவாதியாக சித்தரிக்கின்றார்கள்.

நாங்களே தமிழ் மக்களை பாதுகாத்தோம். 295,000 தமிழர்களை மீள்குடியேற்றம் செய்யும் போது தற்போது என்னை விமர்சிப்பவர்கள் எவரும் அப்போது முன்வரவில்லை. 8,000 வீடுகளை எமது சொந்த நிதியில் நிர்மாணிக்கும் போதும், நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் போதும் எவரும் முன்வரவில்லை.

ஆனால் தற்போது நான் கூறாத விடயங்களை தூக்கிப்பிடித்துக் கொண்டு போராடுகிறார்கள். இனியாவது இவர்கள் தமிழர்களின் உண்மையான பிரச்சினைகளுக்கும் நலன்புரி திட்டங்களுக்கும் முன்னிலையாக வேண்டும். இனவாதி என்று விமர்சிக்கப்படும் நாங்கள் தான் தமிழர்களுக்கு இரத்தம் கொடுத்தோம். என்றார். (4-7)

## வவுனியாவில்...

விற்பனை நிலையம் ஒன்றின் முன்பாக குறித்த மோதல் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றது.

குறித்த பகுதியில் இடம்பெற்ற இரு இளைஞர் குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலின்போது குறித்த பகுதியில் பயணித்த கார் ஒன்று வழிமறிக்கப்பட்டு தாக்கி சேதமாக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் வவுனியா, யாழ் ஐஸ்கிறீம் வீதியில் வசிக்கும் டிலான் (வயது 25) என்ற இளைஞர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு.

மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். குறித்த தாக்குதல் சம்பவத்தில் மேலும் 4 பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதலில் படுகாயமடைந்தவரின் சகோதரர் மீதும் குறித்த குழு வவுனியா வைத்தியசாலையில் வைத்து தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

இதனையடுத்து வைத்தியசாலையில் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், வைத்தியசாலை முன்பாகவும் குறித்த இளைஞர் குழுக்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டது.

அதிலும் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனடிப்படையில் குறித்த சம்பவத்தால் மொத்தமாக 5 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இதேவேளை, குறித்த சம்பவம் இடம்பெற்ற பட்டாணிச்சூர் பகுதிக்கு

செய்தி சேகரிக்க் சென்ற ஊடகவியலாளர்களுக்கும் குறித்த பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழு அச்சுறுத்தல் விடுத்ததையடுத்து அவர்கள் அங்கிருந்து வேறு இளைஞர்களால் பாதுகாப்பாக வெளியேற்றப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(4-7)

## தமிழ்...

தெரிவித்துள்ளனர்.

முன்னதாக பிரதமர் நரேந்திர மோடியிடம் வலியுறுத்த வேண்டிய விடயங்களை சுட்டிக்காட்டி தமிழ்த்தேசிய கட்சிகள் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளன.

மேலும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் தமது நிலைப்பாடுகளை நேரடியாகவும் அறிவித்துள்ள நிலையில் நாளை செவ்வாய் பிற்பகல் 3 மணிக்கு பாராளுமன்றத்தில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

இதன்போது அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு குருந்தூர் மலை விவகாரம் உள்ளடங்கலாக அண்மைய காலங்களில் இடம்பெற்றுவரும் நில ஆக்கிரமிப்புக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடவிருப்பதாக இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். (4-7)

## யாழில்...

மதிக்கப்பட்டுள்ளனர்.

பேருந்தும், காரும் மோதியே இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேருந்தால் மோதப்பட்ட கார் மோதி மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரின் கால் முறிந்ததாகவும் தெரியவந்துள்ளது.

மேலும் காரை செலுத்தி வந்தவரும் காயமடைந்ததோடு இருவரும் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4.7)


## நின் சேவை நயப்பில்

**திரு.இரட்ணசபாபதி இரவீந்திரன்** (SLTAS - I)

(ஆசிரிய ஆலோசகர், (முறைசாராக் கல்வி)

ஆசிரியனாய், ஆலோசகனாய் முப்பத்து மூன்று ஆண்டுகள் நிறைவான நின் சேவைக்கும் மகிழ்வான ஓய்வுக்கும் மனதார வாழ்த்துகிறோம்.




சேவை விபரம்

27.03.1990 - 1995 - யா/முத்துத்தம்பி ம.வி
1995 - 2000 - யா/பெரியபுலம் ம.வி
2000 - 2003 - யா/காரைநகர் இந்துக் கல்லூரி
2003 - 2007 - யா/சென்.சாள்ஸ் ம.வி
2008 - 2023.07.17 - வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக நலன்புரிச் சங்கம் (C-6926)



## ஆத்ம ஈடேற்றப் பிரார்த்தனை



கீரிமலை நகுலேஸ்வரா ஆலய அதீன கர்த்தா

**மஹாராஜஸ்ரீ நகுலேஸ்வர குருக்கள்**

அவர்களின் புண்ணிய ஆத்மா எல்லாம் வல்ல நகுலேஸ்வரப் பெருமானின் திருவடிகளில் பேரின்பப் பெருவாழ்வு பெற எம் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

சைவ சமய விவகாரக் குழு,

(C-6931)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அறுவை சிகிச்சைக்காக

## காத்திருப்பு பட்டியலில் 2000 சிறுவர்கள்

### மருத்துவர் விஜேசூரிய

(கொழும்பு)

**இதய அறுவை சிகிச்சைகளுக்காக 2,000 வரையிலான சிறுவர்கள் காத்திருப்புப் பட்டியலில் உள்ளனர்.**

சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் இதய நோய் பிரிவின் மருத்துவ ஊழியர்கள் குழாம் நாளொன்றுக்கு 5 அறுவை சிகிச்சைகள் வீதம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக, அதன் பணிப்பாளர் மருத்துவர் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

மருத்துவ ஊழியர்கள் குழாம் இதற்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்ட போதிலும், பௌதீக வளங்கள் பற்றாக்குறையினால் இதய அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாதுள்ளது.

இதற்கான தீர்வாக 11 மாடிகளைக் கொண்ட சிறுவர் இதய நோய் பிரிவொன்றை கொழும்பு சிறுவர் மருத்துவமனையில் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகள் எதிர்வரும் ஆண்டு நடுப்பகுதியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக வைத்தியர் விஜேசூரிய மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஞி)

# இஸ்லாமிய அமைப்புகள் மீதான தடையை நீக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தடை செய்யப்பட்டிருந்த ஐந்து இஸ்லாமிய அமைப்புகளின் மீதான தடையை நிபந்தனையுடன் நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

புலனாய்வு அமைப்புகளின் நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகளிற்கமைய, இலங்கை அரசாங்கத்தில் தடை செய்யப்பட்ட 11 இஸ்லாமிய அமைப்புகளில் இருந்து,

ஜமியத்துல் அன்சாரி சுன்னத்துல் முஹம்மதியா ,ஶ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாத், அகில இலங்கை தவ்ஹீத் ஜமாத் இலங்கா தவ்ஹீத் ஜமாத் ,ஐக்கிய தவ் ஹீத் ஜமாத் எனும் ஐந்து அமைப்புகளின் மீதான தடையை நிபந்தனையுடன் நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும் குறித்த இந்த குழுக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு இடையேயான கலந்துரையாடலின் பின்னரே இந்த ஐந்து அமைப்புகளின் மீதான தடை நீக்கப்படும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஞி)

# ரணிலின் இந்திய விஜயத்தின் போது கைச்சாத்தாகும் 5 ஒப்பந்தங்கள்

### இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின் போது இரு நாடுகளிலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் ஐந்து ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்கவுடனான சந்திப்பின் போது இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலின் போது இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ராவும் இந்த உடன்படிக்கைகள் குறித்து சாகல ரத்நாயக்கவுக்கு அறிவித்தார்.இந்த ஒப்பந்தங்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை வளர்க்கவும் வலுப்படுத்தவும் இரு நாடுகளுக்கு இடையே பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்தவும் உதவும் என்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் 20 ஆம் திகதி இந்தியாவுக்கு பயணமாகவுள்ளார். (ஞி)

# யாழ்- கொழும்பு ரயில் சேவைக்கான கட்டண விபரம் அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மற்றும் கொழும்புக்கு இடையிலான ரயில் சேவைக்கான கட்டணங்கள் தொடர்பான விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி உத்தரதேவி ரயிலில் 1 ஆம் வகுப்பு - 3200 ரூபாவாகவும் 2 ஆம் வகுப்பு 2500 ரூபாவாகவும் 3 ஆம் வகுப்பு 1800 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

யாழ் தேவி ரயிலில் 1 ஆம் வகுப்பு - 2800 ரூபாய் என்றும் 2 ஆம் வகுப்பு - 1900 ரூபாய் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இரவு நேர தபால் ரயிலில் 1 ஆம் வகுப்பு - 3200 ரூபாய் என்றும் 2ஆம் வகுப்பு - 2200 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நகர்சேர் கடுகதி ரயில் சேவை அடுத்த மாதம் தொடங்கியதும் அதற்கான கட்டணம் அறிவிக்கப்படும் .

மேலும் மற்றொரு யாழ்ப்பாணம் ஓடிசி என்ற சொகுசு ரயில் சேவை ஆரம்பிக்க வாய்ப்புள்ளது. அதற்கான கட்டணம் 4000 ஆக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஞி)

# 13 ஆவது திருத்தத்தை இந்தியா திணிக்கக் கூடாது

### இந்தியப் பிரதமருக்கு சிவாஜிலிங்கம் கடிதம்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசாங்கம் இலங்கை தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வாக 13 ஆவது திருத்தத்தை பரிந்துரைக்கவோ அல்லது அதனை திணிக்கவோ கூடாது என சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தை முன்னிட்டு, இந்திய பிரதமர் அவரிடம் வலியுறுத்த வேண்டிய விடயங்களை சுட்டிக்காட்டி அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்களின் சுய நிர்ணயத்தை இந்தியா அங்கீகரித்துள்ள நிலையில் நிரந்தர அரசியல் தீர்வை காண ஐ.நா.வின் கண்காணிப்புடன் பொது வாக்கெடுப்பு அவசியம்.

மேலும் அமெரிக்க, அவுஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து இலங்கையில் பொது வாக்கெடுப்பை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்முறைகள் மீண்டும் நிகழாமல் இருக்கும் வகையில் உத்தரவாதம் வழங்கக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வு அவசியம் என்றும் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (ஞி)

# ஏழை நாடுகளின் வறுமையை தடுக்க கடன் நிவாரணம் வழங்குங்கள்

### உலக நிதி அமைச்சர்களுக்கு ஐ.நா வலியுறுத்து

(ஜெனீவா)

ஏழை நாடுகளுக்கு கடனை திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடிக்குமாறு உலக நிதி அமைச்சர்களிடம் ஐ.நா வளர்ச்சித் திட்டம் வலியுறுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு 25 குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் தங்கள் வருவாயில் 20 சதவீதத்தை கடன் சேவைக்காக செலவிட்டதாக அந்த அமைப்பு மதிப்பிட்டுள்ளது.

குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு, கடன் சுமை தாங்க முடியாததாகிவிட்டது என்றும் ஐ.நா வளர்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர்



அச்சிம் ஸ்டெய்னர் தெரிவித்தார்.

கொரோனா தொற்று, பணவீக்கம் மற்றும் கடன் வாங்கும் செலவுகளின் அடுத்தடுத்த எழுச்சி 165 மில்லியன் மக்களை வறுமையில் தள்ளியது.

உலக மக்கள்தொகையில் 20 சதவீதத்திற்கும் அதிகமானோர், சுமார் 1.65 பில்லியன் பேர் ஒரு நாளைக்கு 3.65 டொலருக்கும் குறைவாகவே செலவு செய்கின்றார்கள்.

மேலும் குறிப்பிட்டளவு மக்களுக்கு உணவை பெற்றுக் கொள்வதில் கூட பாரிய சவால்கள் காணப்படுகிறது.

இந்நிலையில் வறுமையின் அதிகரிப்பு ஆபத்தானது என சுட்டிக்காட்டிய ஸ்டெய்னர், வறுமையில் உள்ள 165 மில்லியன் மக்கள் அனைவரும் குறைந்த அல்லது குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ஞி)

# மாணவர்கள் மீது கை வைக்கும் ஆசிரியர்களுக்கு இனி சிக்கல்

(கொழும்பு)

கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு துன்புறுத்தல்கள் ஏற்படுவதை தடுக்க அடுத்த சில வாரங்களில் அவசர தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்படும் என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்..

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்துவதன் மூலம் ஓரளவு துன்புறுத்தல்களை கட்டுப்படுத்த முடியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலங்களில் பாடசாலைகளில் ஆசிரியர்களின் தாக்குதல்களுக்கு மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞி)

# பெரும்போகத்தில் விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்க திட்டம்

### விவசாய அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பெரும் போகத்தில் விவசாயிகளுக்கு மற்றுமொரு இரசாயன உரத்தை இலவசமாக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடிய தாகவும் அதற்கு ஜனாதிபதி சாதகமாக பதிலளித்துள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அடுத்த பெரும் போகத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் உரங்களை கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்களுக்கு பதிலாக விவசாயிகளின் கணக்குகளுக்கு பணத்தை வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, பொது மக்கள் தமது விருப்பத்திற்கு ஏற்ப



இரசாயன உரங்கள் அல்லது கரிம உரங்களை தனியார் அல்லது அரச உரக் கூட்டுத்தாபனத்தில் கொள்வனவு செய்யலாம் என மஹிந்த அமரவீர தெரித்தார். (ஞி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மே.தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட்
# இந்தியா அபார வெற்றி!



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்தியா, இன்னிங்ஸ் மற்றும் 141 ஓட்டங்களினால் வெற்றிபெற்றுள்ளது.

மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, இரண்டு டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் மற்றும் 5 இருபதுக்கு இருபது போட்டிகளில் விளையாடவுள்ளது.

அதன்படி டொமினிகா மைதானத்தில் கடந்த 12 ஆம் திகதி அரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 150 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

அவ்வணி சார்பாக அலிக் ஏத்தனஸ் 47 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக்கொடுக்க பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக அஷ்வின் 5 விக்கெடடுகளையும் ஜடேஜா 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இதனை தொடர்ந்து முதல் இன்னிங்ஸை தொடர்ந்து இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஜேஷ்வால் முதல் போட்டியிலேயே 171 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்து அணிக்கு வலு சேர்த்தார்.

அதன்படி 5 விக்கெட்களை இழந்து 421 ஓட்டங்களை இந்திய அணி பெற்றுக்கொடுக்க அவ்வணி சார்பாக ரோஹித் சர்மா 103 ஓட்டங்களையும் விராட் கோலி 76 ஓட்டங்களையும் பெற்றுகொடண்டனர்.

தொடர்ந்து 291 ஓட்டங்கள் பின்னிலையோடு தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த மேற்கிந்திய தீவுகள் அணி 130 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

அவ்வணி சார்பாக அலிக் ஏத்தனஸ் 28 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் ரவிசந்திரன் அஷ்வின்

7 விக்கெட்களை சாய்த்தர். போட்டியின் ஆட்ட நாயகனாக ஜேஷ்வால் தெரிவு செய்யப்பட்டார். (4)

## 'ஜேம்ஸ் வோரியர்ஸ்' விளையாட்டுக்கழகம் நடத்தும்
## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின்
# இறுதியாட்டம் நாளை

புனித யாகப்பர் ஆலய திருவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு பாடும்மீன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக நாவாந்துறை பங்குத்தந்தை அருட்பணி மரியாம்பிள்ளை யேசுரட்டினம் கலந்து கொள்ளவுள்ளார். (நி-106)



**விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் புதிய விளையாட்டுத் துறை பணிப்பாளர் நாயகமாக கலாநிதி ஷெமால் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.**

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2867

**மதுஷன்**

காதலன்- நம்ம காதல மெதுவா எங்க வீட்டில சொல்லிட்டேன்
காதலி- அவங்க என்ன சொன்னாங்க ஒத்துக்கிட்டாங்களா
காதலன்- மெதுவா சொன்னதால அவங்களுக்கு கேட்கல.




**தாரணி**

இதுக்குத்தான் பிரியாணி கிண்டும் போது
பக்கத்துல நிற்கக் கூடாதுங்கறது
கோழின்னு நினைச்சி தூக்கிப் போட்டுட்டாங்க.



மம்மி அந்தப் போன கட் பண்ணிட்டு
என்ன கொஞ்சம் இறக்கி விடுமா.

**வர்சன்**

சொந்தக்காரனுங்க முன்னாடி சொத்து
சேர்த்து வாழத் தேவையில்லை.



அவனுங்க முன்னாடி சிரிச்சிட்டே வாழ்ந்துட்டா
போதும். அவங்களால ஜீரணிக்க முடியாது.

**ஆகாஷ்**

டேய் எதைக் காணோம்
உண்மையைச் சொல்லுடா



சார் வாங்கி பத்து நாள் கூட ஆகல்ல
என்னோட சம்பளத்தைக் காணோம் சார்.

**சந்தியா**



என்னதான்
டீச்சருங்க
படிப்பு,
ஒழுக்கம்
சொல்லிக்
கொடுத்தாலும்
வாழ்க்கைல
மறக்க
முடியாத
டீச்சருன்னா
அது சத்துணவு
டீச்சருதான்.

**நிரோதிகா**

ஒருவர் - சுவரில் எழுதாதேன்னு இருந்தது.
மற்றொருவர்- அப்புறம் என்ன செய்தே?




ஒருவர்- சரி எழுதலைன்னு எழுதிட்டு வந்திட்டேன்.

**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயதிருப்பணிகளில் நகுலேஸ்வரக் குருக்களின் வகிபாகம் யாராலும் மறக்க முடியாதது

## இந்து குருமார் அமைப்பு



"சிவாகமகலாநிதி" கீரிமலை நகுலேஸ்வர பெருமான் ஆதீன கர்த்தர் இராஜஸ்ரீ.கு. நகுலேஸ்வர குருக்கள் தனது 98 வயதில் சிவப்பிராப்தி நிலை எய்தினார் எனும் செய்தி அறிந்து மிகவும் கவலை அடைந்தோம் என இந்துக் குருமார் அமைப்பு தெரிவித்துள்ளது. மேலும் தெரிவிக்கையில்,

ஈழத்தில் மூத்த சிவாச்சாரிய பெருந்தகையாக மிளிர்ந்தவர். அன்புடன் அனைவருடனும் பழகும் பண்பாளர். நகுலேஸ்வர பெருமான் மீது தீராத காதல், பற்று, அன்பு, நம்பிக்கை, உறுதி கொண்டவர்.

நிறைவான பெருமகன் நகுலேஸ்வர பெருமானாரின் ஆலய ஒவ்வொரு திருப்பணியிலும் குருக்களின் வகிபாகம் யாராலும் மறந்திட முடியாது. என்றும் நிலைத்திருக்கும் இறை சேவை. ஊரவர்களினால் மிகவும் நேசிக்கப்பட்ட விப்ரஸ்ரேஷ்டர்.

பாரத தேசத்தின் மரியாதைக்கும் உரியவர். தர்மபுரம் ஆதீனம் நட்சத்திர 27 ஆவது குருமணிகள் அவர்களினால் 13.12.2021 அன்று நம்பியாண்டார் நம்பி ஆலய கும்பாபிஷேக நாளன்று சிவாகம கலாநிதி எனும் சிறப்புப்பட்டத்தினை வழங்கி கௌரவம் செய்த பொழுது, அந்த கௌரவத்தினை இந்திய அரசின், யாழ்ப்பாணம் இந்திய தூதர் நட்ராஜ் குருக்களின் இருப்பிடம் சென்று வழங்கி கௌரவம் செய்தமை இதற்கு சான்று.

குருக்கள் அவர்களது ஆத்ம சிவப்பிராப்திக்கு அன்பே உருவான பரம்பொருளான இறைவனின் பாதம் பணிந்து இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் எமது பிரார்த்தனை செய்கிறோம். துயர்தனை அடைந்துள்ள அத்தனை அன்புள்ளங்களுடன் எமது ஆறுதலை பகிர்ந்து கொள்கிறோம் என இந்து குருமார் அமைப்பு சார்பாக கலாநிதி சிவஸ்ரீ. கு.வை.க.வைத்தீஸ்வரக் குருக்கள் தெரிவித்தார். (நி)

### மானிலம் போற்றிய மனிதத் தெய்வம் சிவனோடு வாழும்

நகுலேஸ்வரர் நாமம் கொண்ட ராஜ்ராஜஸ்ரீ
நகுலாம்பிகா நகுலேஸ்வரர் பாதம் சேர்ந்தார்
தகுதி மிகு தாளாத கீர்த்திகள் சேர்ந்த குருக்களாவார்
தமிழ் நிலமெழுந்த நகுலேஸ்வரரின் பூசகராய் திகழ்ந்தார்
நிறைவுக்கோர் நிலையமாக இயங்கிய ராஜ ராஜஸ்ரீ
நீள நினைப்பதற்குரிய நகுலேஸ்வரத்தை காத்த திருமகனார்
துறைதொறும் சிவஜோதியாக பிரகாசித்த குருக்களவர்
தொன்மை சிவ வரலாற்றை பேணிய சிவாச்சாரியார்
மறையுள்ள வரையும் குருக்கள் ஐயாவின் நாமம் வாழும்
மானிலம் போற்றிய மனிதத் தெய்வம் சிவனோடு வாழும்

*மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்.*

# சு.க வின் தலைமையை பொறுப்பேற்க தயார்- தயாசிறி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமை பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயார் என கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமை கோரினால் தலைமை பொறுப்பினை ஏற்றுக் கொள்ளத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார். (நி)

# வாழைப்பழம் தொண்டையில் சிக்கி 8 வயது சிறுமி உயிரிழப்பு

(கொழும்பு)

வாழைப்பழம் தொண்டையில் சிக்கி தொம்பே பகுதியைச் சேர்ந்த 8 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி பாடசாலையில் இடைவேளை நேரத்தின்போது வாழைப்பழம் சாப்பிட்டு கொண்டிருந்த போது தொண்டையில் வாழைப்பழம் சிக்கியது.

பாடசாலையின் ஆசிரியர், ஊழியர்கள் அவரை தொம்பே ஆதார மருத்துவமனையில் அனுமதித்த போது சிறுமிக்கு செயற்கை சுவாசம் வழங்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கம்பஹா பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

5 நாட்களாக மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (நி)

# ஒவ்வாமையை ஏற்படுத்திய மருந்துகள் பாவனையில் இருந்து இடைநிறுத்தம்

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

நுண்ணுயிர் கொல்லி மருந்தின் 3 தொகுதிகளை தற்காலிகமாக பாவனையிலிருந்து நீக்கியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த மருந்துத் தொகுதியை வழங்கியதால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பேராதனை மருத்துவமனையில் உயிரிழந்த யுவதிக்கு வழங்கப்பட்ட தடுப்பூசி தொகுதி மற்றும் கண்டி தேசிய மருத்துவமனையில் இரு நோயாளர்களுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்திய தடுப்பூசி தொகுதி ஆகியனவே இவ்வாறு பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கண்டி தேசிய மருத்துவமனையில் நுண்ணுயிர்க் கொல்லி மருந்து வழங்கப்பட்டதன் பின்னர் ஒவ்வாமைக்குள்ளான நோயாளிகளின் நிலை கவலைக்கிடமாக இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இராசிபலன்

17.07.2023
ஆடி 01, திங்கட்கிழமை
அமாவாசை பின்னிரவு 12.20 மணிவரை
புநர்பூசம் பின்னிரவு 5.59 மணிவரை

சுபநேரம் -12.00-1.30மணிவரை
இராகுகாலம்-7.30-9.00 மணிவரை
ஆடிப்பிறப்பு ,அமாவாசை விரதம்

சந்திராஷ்டமம்- கேட்டை

**வளவன்**

**மேஷம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கடகம்** பணப்புளக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அலைச்சல்களால் மனச் சோர்வு ஏற்படலாம்,அன்றாடப் பணிகள் நன்றாக நடை பெற பிரார்த்திப்பீர்கள்.

**துலாம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், மாற்றுக் கருத்தால் மனம் மாறுவர், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

**மகரம்** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், கடன் பிரச்சினைகளைத் தீர்க்க முழுமூச்சுடன் செயற்படுவீர்கள்.

**ரிஷபம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள வந்து சேரலாம்,புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** உன்னதமான வாழ்வுக்கு வழியமைத்துக் கொள்வீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு,அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், காரிய அனுகூலம் உண்டு.

**விருச்சிகம்** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடையும் நாள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், உறவினர்கள் நண்பர்கள் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்,காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.


**மீனம்** வளர்ச்சிப் பாதைக்கு வழிகாட்டியவர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோதனைக்கு மத்தியில் தான் விடியலும் உள்ளது.**

# ஆடிப்பிறப்பு- தமிழரின் பண்பாட்டுப் பண்டிகை

**ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை**
**ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!**
**கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம்**
**கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!**



ஆடிப்பிறப்பு என்பது தமிழ் ஆடி மாதத்தின் ஆரம்ப நாள். ஒரு வருடத்தின் நடுப்பகுதியில் வரும் இந்த தொடக்க நாளை ஒற்றுமையுடனும்.சந்தோஷமாகவும் வரவேற்கவே.. "ஆடிக் கூழ் நிகழ்வு தமிழர்களால் கொண்டாடப்படுகிறது."

இந்தக் கொண்டாட்டமானது, ஒரு பண்பாட்டுடன், நம்பிக்கையாக, சடங்காக சந்ததி வழியாக கடத்தப்படுகிறது. ஏன் ஆடி மாதத்தை வரவேற்க வேண்டும்? ஆடி மாதத்திலிருந்து குளிர்காலம் ஆரம்பிப்பதால் மாறா காலநிலை இருந்த காலகட்டத்தில் ஆடிப்பெருக்கு எனும் மழைக்காலத்தில் மழை சிலவாரங்கள் பெய்யும். இப்போதெல்லாம் அவ்வாறில்லை. பருவநிலை மாற்றம் ஆடிப்பெருக்கை மாற்றம் செய்துவிட்டது.

ஆடிப்பெருக்கு வந்ததும் உழவர்கள் வயல்வேலைகளை ஆரம்பிப்பர். அடுத்து வரும் ஆறு மாதங்களும் ஓய்வற்ற கடின உழைப்பை வழங்க வேண்டிய மாதங்களாகும் எனவே அந்த ஆறு மாதங்களுக்கும் வரப்போகின்ற அழகிய குளிர்மையான காலத்தை வரவேற்கவே ஆடித் திருநாளைக் கொண்டாடுகின்றோம்:

நெல்,பயறு.உளுந்து ஆகிய தானியங்களோடு கருப்பட்டியும் சேர்த்து தயாரித்த கூழ் மற்றும் கொழுக்கட்டையை உணவுப் பண்டங்கள் தயாரித்து உறவினர், அயலவர்களிடையே பகிர்ந்து மகிழ்ந்திருப்பது இந்நாளின் முக்கிய சிறப்பம்சமாகும். தமிழில் "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்ற பாடலும் பிரபல்யமானது. தமிழர் நாம் கல், மலை, மரம், சூரியனையும் மட்டும் வழிபட்டு வரவில்லை. இதேபோல காலநிலையையும் வணங்கியிருக்கிறோம்.

அதனை வரவேற்று விமரிசையாக விழாவும் எடுத்திருக்கிறோம்; உலகின் சிறப்பான பண்பாட்டுக்குரியவர்கள் நாம் தான் என்பதை எடுத்துக்காட்ட இதைவிட வேறு உதாரணம் தேவை இல்லை. கடவுள் பின்னணியில் இருக்க வேண்டும் என்பதற்காகவே. இயற்கையோடு கடவுள்கள் பிணைக்கப்பட்டிருக்கின்றனர்.அதை விஞ்ஞான பூர்வமாகப் பார்த்தால். சமூகம் இணைந்து வருடமொன்றின் இரண்டாம் கட்ட மாகிய காலநிலைக் காலத்தைச் சேர்ந்து வரவேற்கிறது. பொருளாதார ரீதியில் நோக்கினால் சமூகத்திற்கு வளம் தரப்போகிற காலகட்டத்திற்கு மதிப்பளிக்கிற சடங்குதான் நடக்கிறது.

இன்றைய காலத்தில் இவ்வாறான சடங்குகளை நாம் பின்பற்றுவதில்லை. நம் சமூகம் விவசாயத்திலிருந்து வெளிவந்து. விவசாயத்திற்கும் மக்களுக்குமிடையிலான இடைவெளி அதிகரித்துவிட்டமையினாலும் இவற்றை மறந்துவிட்டோம்.

ஆனால் இதுபோன்ற சம்பிர தாய பின்பற்றல்களில்தான் இன உணர்வு மனதில் வேரோடு கிறது. இன உணர்வின் மீதான அதீத பற்றுதலே தேசிய உணர் வாக மாற்றம் அடைகிறது. ஒற்றுமையான தேசிய உணர்வுதான் தேசத்தை உருவாக்கும். எனவே இவற்றை பின்பற்றாமல் இன உணர்வை மீள உருவாக்க இயலாது.இனத்திற்கான எண்ணத்தைப் புதுப்பிக்க முடியாது. எனவே நம் பண்பாட்டை ஆழமாக, அழகாக புரிந்து நடந்து கொள்வோம்.

எமது பண்பாட்டை மீளக் கட்டியெழுப்பும் இந்த மாதிரியான சடங்குகளை மீளமீள நிகழ்த்தி நம்மையும். நம் பண்பாடுகளையும் புதுப்பித்துக்கொள்வோம்.

## மந்துவில் சின்னச்சந்தைக்கு தீயிட்ட விஷமிகள்



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மந்துவில் பகுதியில் அமைந்துள்ள சின்னச் சந்தை பகுதியில் இரண்டு மரக்கறி விற்பனை நிலையங்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு தீயிட்டு எரிக்கப்பட்டிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது மேற்படி இரு வியாபாரிகளதும் மரக்கறிப் பட்டறை,கொட்டில் மற்றும் மரக்கறிகள் ஆகியனவும் தீயில் எரிந்து கருகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-30)

## வட மாகாணத்தின் 34 உள்ளூராட்சி சபைகளுக்கு தலா 65 மில்லியன் ஒதுக்கீடு- உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்

(சாவகச்சேரி)

வடக்கு மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளுக்கும் ஓகஸ்ட் மாதம் 65மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு கிடைக்கவிருப்பதாக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தென்மராட்சி-மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற சாவகச்சேரிப் பிரதேசசபையின் உப பணிமனை மற்றும் சித்த மருந்தக கட்டட திறப்புவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் ஊடாக உள்ளூராட்சி சபைகளுக்கு மேலும் பல உதவித்திட்டங்கள் கிடைக்கவுள்ளன.

வடக்கு மாகாணத்தில் உள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் இரண்டு திட்டங்கள் கிடைக்கப்பெறவுள்ளன.

ஒரு திட்டம் 40 மில்லியன் ரூபாய் திட்டமாகவும்-மற்றைய திட்டம் 25மில்லியன் ஒதுக்கீடாகவும் காணப்படும்.அதனை 14மாத காலத்திற்குள் சபைகள் நிறைவேற்ற வேண்டும். என்ன திட்டங்களை நடைமுறைப்படுத்துவது என்பதனையும் சபைகளே தீர்மானிக்கப்போகின்றன.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி நிலைமை நிலவினாலும் வடக்கில் உள்ள 34 சபைகளுக்கும் தலா 65 மில்லியன் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறுகின்றது என்றால் அதற்கு சபைகளின் வினைத்திறனான செயற்பாடே காரணம்.எதிர்காலத்திலும் கிடைக்கும் ஒதுக்கீடுகளை சரியாக பயன்படுத்தி மக்களுக்கு வினைத்திறனான சேவையை உள்ளூராட்சி சபைகள் வழங்க வேண்டும்.

அத்துடன் சாவகச்சேரிப் பிரதேசசபை மிக நெருக்கடியான காலகட்டத்தில் மிருசுவில் உப பணிமனை மற்றும் சித்த மருந்தக கட்டடம் ஆகியவற்றை அமைத்து வெற்றிகரமாக திறந்து வைத்துள்ளது.

26 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட இந்த அலுவலகங்களின் பலன் மக்களை முழுமையாக சென்றடைய வேண்டும்.அப்போதே இந்தத் திட்டம் வெற்றியடையும் என அவர் தெரிவித்தார். (நி-30)



கொடிகாமம் போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் மாதிரிச் சந்தை நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றிருந்தன.

(படம்-சுபேசன்)

## நல்லூர் பாலகதிர்காம மஹோற்சவத்தில் வெள்ளை யானை வெள்ளோட்ட விழா இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தான மஹோற்சவம் இன்று ஆரம்பமாகி 16 தினங்கள் நடைபெறவுள்ளது.இன்று மாலை 5.30 மணிக்கு தேவலோக ஐராவதம் என்று சொல்லப்படும் வெள்ளை யானை வெள்ளோட்ட விழா நடைபெறவுள்ளது.எனவே அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு வருகை தந்து முருகப் பெருமானின் ஆசீர் பெற்றுச் செல்லுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (நி)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

CCIY இன் ஒழுங்கமைப்பில் இலங்கை - தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் பொறியியலாளர்களால் வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை BIOGAS கட்டுமானம் மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான ஒருநாள் செயலமர்வு நடைபெற உள்ளது. BIOGAS கட்டுமானத்திற்கு அனுமதி பெற ஆர்வமுள்ள பொறியியலாளர்கள் மற்றும் BIOGAS கட்டுமானம், கழிவு முகாமைத்துவம் தொடர்பான அறிவை பெற ஆர்வமுள்ளவர்களும் இதில் பங்குபற்றிக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு ஆர்வம் உள்ளவர் 070 366 3604 / info@cciy.lk ஊடாக CCIY தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனங்களுக்கிடையே நிலவும் புரிந்துணர்வின்மையை

# தனிப்பட்ட நலன்களுக்காக

# பயன்படுத்தும் அரசியல்வாதிகள்

## உலகத் தமிழர் பேரவை சாடல்

(கொழும்பு)

**நாட்டில் இனங்களுக்கு இடையில் நிலவுகின்ற அச்சம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு ஆகியவற்றைக் களைவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது அனைத்து சமூகங்களினதும் அச்சமூகத் தலைவர்களினதும் கடமையாகும்.**

ஆனால் இதில் பெரும்பாலான அரசியல்வாதிகள் தோல்வியடைந்திருப்பதுடன் மாத்திரமன்றி, மக்களின் அச்சத்தைத் தூண்டி, அதனைத் தமது அரசியல் சுயலாபங்களுக்காகப் பயன்படுத்துகின்றனர் என்று உலகத்தமிழர் பேரவை விசனம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து உலகத்தமிழர் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாவது,

நாகதீப ரஜமகாவிகாரையின் வணக்கத்துக்குரிய நவடகல படுமகீர்த்தி திஸ்ஸநாயக்க தேரர் நயினாதீவுக்கு வருகை தந்து 50 ஆண்டுகள் பூர்த்தியடைந்திருப்பதை முன்னிட்டு கடந்த 5 ஆம் திகதி நடத்தப்பட்ட கௌரவிப்பு நிகழ்வை நாம் மகிழ்ச்சியுடன் நினைவுகூருகின்றோம். அப்பகுதியில் வாழும் தமிழ்மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதத்தலைவர்கள், ஏனைய இன, மத சமூகத்தினர், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் மதவழிபாட்டு நோக்கிலன்றி, மத ரீதியான மேலாதிக்கத்தைத் திணிப்பதுடன் ஒடுக்குமுறையைப் பிரயோகிக்கும் வகையில் திடீரென பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கப்படும்போது தான் அப்பகுதிகளில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். குருந்தூர் மலையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இந்துக்களின் ஆதி சிவன் ஐயனார் ஆலயம் அகற்றப்பட்டு, அங்கு பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளமை இதற்கான மிகச் சிறந்த உதாரணமாகும்.

முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் பௌத்த விகாரைகள் அமைந்துள்ள பகுதிகளைச் சூழவுள்ள பரந்த நிலப்பரப்பு அண்மையில் தொல்பொருள் திணைக்களத்தினால் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அறிவிக்கப்பட்டிருப்பதுடன் அந்நிலப்பகுதியில் பொருளாதாரம் சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இது மத ஒருமைப்பாட்டிலும், நல்லிணக்கத்திலும் மிகத்தீவிர தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இவ்விவகாரம் பல சர்வதேச நாடுகளின் அரசாங்கங்கள் மற்றும் கண்காணிப்பாளர்களின் அவதானத்துக்கு உள்ளாகியிருக்கின்றது. அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் வாய்மொழி மூல அறிக்கையிலும் இது பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் நாட்டில் இனங்களுக்கு இடையில் நிலவுகின்ற அச்சம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு ஆகியவற்றைக் களைவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது அனைத்து சமூகங்களினதும் அச்சமூகத்தலைவர்களினதும் கடமையாகும். ஆனால் இதில் பெரும்பாலான அரசியல்வாதிகள் தோல்வியடைந்திருப்பதுடன் மாத்திரமன்றி, மக்களின் அச்சத்தைத் தூண்டி, அதனைத் தமது அரசியல் சுயலாபங்களுக்காகப் பயன்படுத்துகின்றனர் என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)


## வேலணை பிரதேச சபை
## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத கட்டாக்காலி நாம்பன் கால்நடையொன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

**இடம் :- வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகம்**
**காலம் :- 18.07.2023 செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணி**

ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தைச் செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.

பகிரங்க ஏலத்தில் சித்தியடைவோர் உடனடியாக பணத்தினைச் செலுத்தி உரிய பட்டியிலிருந்து உரிய அனுமதியுடன் அன்றைய தினமே ஏற்றிச் செல்ல வேண்டும்.

**தி.தியாகச்சந்திரன்,**
**செயலாளர்,**
**பிரதேச சபை, வேலணை.**
**17.07.2023**

**தொடர்புகளுக்கு**
**021 221 1505**

(C-6925)



## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 178 Cm<br>தகைமை/தொழில்:BSc (Sports)<br>எதிர்பார்ப்பு: Teacher, தொழில் புரியும் பெண்:<br>தொ.இ: B/13826 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 36 1/2<br>உயரம்:5' 3"<br>தகைமை/தொழில்: மருந்தாளர், MSc Reading விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: Doctor,Engineer/ BSc பட்டதாரி<br>தொ.இ:G/13873 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 11 3/4<br>உயரம்: 5' 9"<br>தகைமை/தொழில் MSc உதவி மிருக வைத்தியர் (கனடா)<br>எதிர்பார்ப்பு: ITபட்டதாரி<br>தொ.இ: B/13828 | பிறப்பு:1975 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 67<br>உயரம்:5<br>தகைமை/தொழில்: பிரதிக்கல்விப் பணிப்பாளர்<br>எதிர்பார்ப்பு: அரச/ தனியார் தொழில்<br>தொ.இ: G/13876 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 20<br>உயரம்:5' 9"<br>தகைமை/தொழில்: Computer engineer (கனடா)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி (உள்நாடு மட்டும்)<br>தொ.இ: B/13829 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 41 3/4<br>உயரம்:5' 4<br>தகைமை/தொழில்: BSc,MBA Senior Software Engineer<br>எதிர்பார்ப்பு: Accountant, Engineer<br>தொ.இ:G/13877 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 40<br>உயரம்:160 Cm<br>தகைமை/தொழில்: BDS அரச பல் வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: Doctor,Engineer, IT<br>தொ.இ: B/13830 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 52<br>உயரம்:158 Cm<br>தகைமை/தொழில்: BA (Hons), விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, வெளிநாடு<br>தொ.இ:G/13885 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**



## சேவைநலன் பாராட்டு




**திரு. சிதம்பரம்**
**கருணாகரன்** (SLTS-I)
Special Trained (English)
Dip-in-English (DETE)

வ/பாவற்குளம் அ.த.க பாடசாலை
27.04.1982-11.07.1985
வ/இயங்கராவூர் அ.த.க பாடசாலை
12.07.1985-31.08.1985
வ/பாவற்குளம் கணேசுவரா மகா வித்தியாலயம்
01.09.1985-31.01.1986
வ/பாவற்குளம் அ.த.க பாடசாலை
01.02.1986-11.06.1989
வ/பம்பைமடு அ.த.க வித்தியாலயம்
12.06.1989-14.01.1990
க/போலவலான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
15.01.1990-31.12.1991
வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்
01.01.1992-30.04.1995
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
01.05.1995-15.06.2010
யா/நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்
16.06.2010-22.04.2018
யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்
23.04.2018-17.07.2023

**மொத்த சேவைக்காலம்**
**41 1/4 வருடங்கள்**

எமது பாடசாலையில் கடந்த 5 வருடங்களாக ஆங்கிலப் பாட ஆசிரியராக சேவையாற்றி இன்றுடன் சேவையிலிருந்து ஓய்வு பெறும் திரு.சிதம்பரம் கருணாகரன் அவர்கள் எல்லா நலன்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/புனித சாள்ஸ் ம.வி. யாழ்ப்பாணம்.**

(16291)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 166

# தன்வினை தன்னைச்சுடும் இது தான் உலக நியதி

ஒரு கிராமத்தில் கந்தசாமி என்பவர் வாழ்ந்து வந்தார்.

அவர் வீட்டுத்தோட்டத்தில் ஒரு முருங்கை மரம் இருந்தது.

வாரம் ஒரு முறை முருங்கைக் காய்களை பறித்து பையில் நிரப்பி தோளில் வைத்துக் கொண்டு ஒன்பது கிலோமீற்றருக்கு அப்பால் இருக்கும் நகரம் வரை நடந்து சென்றே வழமையாக ஒரு மளிகைக் கடையில் விற்றுவிட்டு வருவது வழக்கம்.

முருங்கைக்காயை கொடுத்து விட்டு அதற்கு பதிலாக அரிசி, பருப்பு, சர்க்கரை போன்ற வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி வருவார்.

கந்தசாமி கொண்டு வரும் முருங்கைக்காயின் சுவை அந்த பகுதி மக்களிடையே மிகவும் பிரபலம்.

இதைப் பயன்படுத்தி மற்ற முருங்கைக்காயோடு கலந்து மளிகைக் கடைக்காரரும் நல்ல லாபம் சம்பாதித்து விடுவார்.

பல வருடமாக கந்தசாமி முருங்கைக்காய் கொண்டு வருவதால் மளிகைக் கடைக்காரர் அதை எடை போட்டுப் பார்ப்பதில்லை.

கந்தசாமி சொல்கின்ற எடையை அப்படியே நம்பி அதற்கு ஈடான மளிகைப் பொருட்களை கொடுத்து அனுப்புவார்.

காரணம் கந்தசாமியின் நேர்மையும் நாணயமும் எல்லோரும் அறிந்தது.

ஒருநாள் கந்தசாமி பத்து கிலோ முருங்கைக்காயை கொடுத்துவிட்டு அதற்கான பொருட்களை வாங்கிச் சென்றார்

சிறிது நேரத்தில்,

பத்து கிலோ முருங்கைக்காய் மொத்தமாய் வேண்டும் என்று ஒரு சமையல்காரர் வந்து கேட்க, அவருக்காக மளிகைக்காரர் எடைபோட அதில் ஒன்பது கிலோ மட்டுமே இருந்தது.

அன்று முழுவதும் மளிகைக்காரருக்கு தூக்கமே வரவில்லை. கந்தசாமி மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தோம். இவ்வளவு பெரிய நம்பிக்கைத் துரோகத்தை செய்துவிட்டாரே.

இத்தனை வருடங்களாக இப்படி முட்டாள்த்தனமாக எடை குறைவான முருங்கைக்காயை வாங்கி ஏமாந்து விட்டோமே.

அடுத்த முறை கந்தசாமி வந்தால் சும்மா விடக்கூடாது என்று கடுங் கோபத்தில் இருந்தார்.

நான்கு நாட்கள் கழித்து கந்தசாமி மிகவும் சந்தோஷமாக வந்தார்.

நல்ல விளைச்சல் என்பதால் நிறைய கொண்டு வந்திருந்தார். கையும் களவுமாக பிடிக்கவேண்டும் என்று, எத்தனை கிலோ என்று மளிகைக்காரர் கேட்க ஒரு கட்டு பத்து கிலோ என்றார் கந்தசாமி.

அவர் முன்னாலேயே எடைபோட்டு பார்க்க ஒவ்வொரு கட்டிலும் ஒன்பது கிலோ தான் இருந்தது .

வந்த கோபத்தில் மளிகைக்காரர் பளார், பளார் என கந்த சாமியின் கன்னத்தில் அறைந்தார்.

இத்தனை வருடமா இப்படித்தான் ஏமாத்திட்டு இருக்கியா? கிராமத்துக்காரங்க ஏமாத்த மாட்டாங்கன்னு நம்பித்தானே எடை போடாம அப்படியே வாங்கினேன். இப்படித் துரோகம் பண்ணிட்டியே சீய் என துப்ப, நிலைகுலைந்து போனார் கந்தசாமி.

அய்யா...என்ன மன்னிச்சிடுங்க நான் ரொம்ப ஏழை. எடைக்கல்லு வாங்குற அளவுக்கு என்கிட்ட காசு இல்லீங்க.

ஒவ்வொரு முறையும் நீங்க கொடுக்கிற ஒரு கிலோ பருப்பை ஒரு தட்டுலயும் இன்னொரு தட்டுல முருங்கைக்காயையும் வச்சி தான் எடைபோட்டு கொண்டு வருவேன்.

இதை தவிர வேற எதுவும் தெரியாதுங்கய்யா என்று காலை பிடித்து அழ மளிகைக்காரருக்கு செருப்பால் அடித்தது போல் இருந்தது.

தான் செய்த துரோகம் தனக்கே வந்ததை உணர்ந்தார்.

இத்தனை வருடங்களாக கந்தசாமியை ஏமாற்ற நினைத்த மளிகைக்காரரும் அவருக்கே தெரியாமல் ஏமாந்து கொண்டு தான் இருந்திருக்கிறார் என்பது தெளிவானது.


நாம் எதைத் தருகிறோமோ
அதுதான் நமக்குத் திரும்ப வரும் .
நல்லதைத் தந்தால் நல்லது வரும்.
தீமையைத் தந்தால் தீமை வரும்.
வருகின்ற காலங்கள் வேண்டுமானால் தாமதமாகலாம்.
ஆனா,
நிச்சயம் வரும்.

ஆகவே நல்லதை மட்டுமே தருவோம். நல்லதை மட்டுமே விதைப்போம்.

மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

# ஸ்பெயினில் காட்டுத்தீ

## சுமார் 500 பேர் வெளியேற்றம்

(ஸ்பெயின்)

ஸ்பெயின் தீவு ஒன்றில் ஏற்பட்ட காட்டுத்தீயினால் சுமார் 500 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். குறித்த தீப்பரவல் நேற்று முன்தினம் ஏற்பட்டுள்ளது.

தீ பரவியதால் சுமார் 11 வீடுகள் அழிந்துள்ளதாக கேனரி தீவுகளின் தலைவர் பெர்னாண்டோ கிளவிஜோ தெரிவித்தார்.

இதுவரையில் சுமார் 346 ஏக்கர் நிலம் தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# பெலாரஸ் வந்தடைந்த வாக்னர் கூலிப்படையினர்

## உறுதிப்படுத்தியது உக்ரைன்



(கீவ்)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு சவால் விடுத்த வாக்னர் கூலிப்படையினர் பெலாரஸ் வந்தடைந்ததை உக்ரைன் உறுதிப்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை சுமார் 60 வாக்னர் வாகனங்கள் உக்ரைன் எல்லையை கடந்து பெலாரஸ் சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் எத்தனை பேர் உள்ளனர் என்பதை தற்போது மதிப்பீடு செய்து வருவதாக உக்ரைன் எல்லைக் காவலர் சேவை வெளிநாட்டு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளது.

பிரிகோஜின் தலைமையிலான வாக்னரின் கூலிப் படையினர் ரஷ்யாவைக் கைப்பற்ற கிளர்ச்சியைத் தொடங்கிய போதும் அது 24 மணி நேரத்திற்குள் கைவிடப்பட்டது.

பிரிகோஷின் பெலரஸ் செல்லவுள்ளதாக அறிவித்த போதிலும், அவர் தற்போது எங்கிருக்கிறார் என்பது குறித்து எந்த தகவலும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

# அலாஸ்கா தீபகற்ப பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

## சுனாமி எச்சரிக்கையும் விடுப்பு

அலாஸ்கா தீபகற்பப் பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் கடலுக்கடியில் 9.3 கி.மீ ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுனாமி எச்சரிக்கையைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த சக்திவாய்ந்த நிலநடு [illegible] அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி உருவாக வாய்ப்பு உள்ளது என்று அமெரிக்க சுனாமி எச்சரிக்கை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுனாமி எச்சரிக் கையைத் தொடர்ந்து அங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (நி)

# அதிகார[illegible] தீவிர[illegible]

## வளைகு[illegible]

(டெஹ்ரான்) ஹார்முஸ் ஜ[illegible] விமானங்களை [illegible] யுள்ளன.

பாரசீக வளைகுடாவில் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு ஈரான் முயற்சி செய்து வருவதை அமெரிக்கா தீவிரமாக எதிர்த்து வருகின்றது.

இந்நிலையில், ஈரான், எண்ணெய் கப்பல்களை கைப்பற்று [illegible]

# கடும்மழை [illegible] தென்கொரி[illegible]



(சியோல்)

தென்கொரியாவில் வெள்ளம், மண்சரிவுகளால் சுமார் 33 பேர் உயிரிழந்ததுடன் மேலும் 10 பேர் காணாமல் போயுள்ளனர் என அந்நாட்டு அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

தென்கொரியாவில் கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்து [illegible]

## வடகொ[illegible]

# அமெரிக்க[illegible] ஆகிய நா[illegible]

(பியாங்யாங்)

வடகொரியாவின் ஏவுகணை சோதனைகள் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

பாரசீக வளைகுடா பகுதியில்

# ...ரத்தை நிலைநாட்ட முயற்சிக்கும் ஈரான்
# ...மாக எதிர்க்கும் அமெரிக்கா

## ...ாகுடாப் பகுதியில் மீண்டும் பதற்றம்

(...ன்)

**...ஸ் ஜலசந்திக்கு இவ்வார இறுதியில் எஃப்-16 ரக ஜெட் ...களை அமெரிக்கா அனுப்பவுள்ளதாக தகவல்கள் வெளியாகி**



...வதையோ அல்லது அதற்கு சேதம் விளைவிப்பதையோ தடுப்பதற்காக ஹார்முஸ் ஜலசந்தியை சுற்றி போர் விமானங்களை அனுப்பி அமெரிக்கா பாதுகாத்து வருகின்றது.

கடந்த வாரம் இந்த ஜல சந்தி அருகே 2 எண்ணெய் கப்பல்களை ஈரான் கைப்பற்ற முயற்சி செய்துள்ளதுடன் ஒரு கப்பலின் மீது துப்பாக்கிச் சூடும் நடத்தியது.

தற்போது, வளைகுடா பகுதியில் ஒரு வாரத்திற்கும் மேலாக ஏ-10 ரக தாக்குதல் விமானங்கள் ரோந்து வருகின்றன.

இவற்றிற்கு வலுச் சேர்க்கும் விதமாக இவ்வார இறுதியில் எஃப்-16 ரக ஜெட் விமானங்களையும் அமெரிக்கா அனுப்பவுள்ளது.

இதன் விளைவாக வரப்போகும் நாட்களில் வளைகுடாப் பகுதியில் அமைதி நிலவுமா? அல்லது அதற்கு மாறாக சச்சரவு வெடிக்குமா? என்பதை நிபுணர்கள் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

# ...ழ மற்றும் மண்சரிவால் ...ரியாவில் 33 பேர் பலி



...வருகிறது.

இதனால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வாகனங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதுடன் ரயில் சேவைகளும் பாதிப்படைந்துள்ளன.

இந்நிலையில், 33 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் மண்சரிவுகளில் சிக்கியும் வெள்ளம் நிறைந்த நீர் நிலைகளில் மூழ்கியும் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடபிராந்தியத்தியத்திலுள்ள ஜியோங்சாங் மாகாணத்தில் மாத்திரம் 16 பேர் உயிரிழந்ததுடன் 9 பேர் காணாமல் போயுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கோசான் நகரில் அணைக்கட்டு ஒன்று நிறைந்து வழிந்ததால், 6,400 பேரை வீடுகளிலிருந்து வெளியேறுமாறு அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

தென்கொரியா முழுவதும் நேற்று முன்தினம் பிற்பகல் ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன. (நி)

# ஐரோப்பாவில் கடுமையான வெப்பநிலை!
## இத்தாலியின் 16 நகரங்களில் சிவப்பு எச்சரிக்கை!



(ரோம்)

பொதுவாக குளிரான காலநிலையைக் கொண்ட ஐரோப்பிய கண்டத்தில், தற்போது பல நாடுகள் கடும் வெப்பத்தால் தவிக்கின்றன.

ஐரோப்பாவை மற்றொரு வெப்பஅலை நெருங்கும் நிலையில், எதிர்வரும் வாரத்தில் ஐரோப்பாவில், குறிப்பாக தெற்கு ஐரோப்பாவில், வெப்பநிலை மேலும் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இத்தாலியின் 16 நகரங்களுக்கு அதிக வெப்பநிலை தொடர்பான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாவுக்குப் பிரசித்தி பெற்ற தலைநகர் ரோம், புளோரன்ஸ், பொலோக்னா முதலான நகரங்களில் ஆரோக்கியமான மனிதர்களுக்கு கூட ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய வெப்பநிலை நிலவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஸ்பெய்ன், பிரான்ஸ், ஜேர்மனி, போலந்து, செக்குடியரசு முதலான நாடுகளிலும் கடும் வெப்பநிலை நிலவும் என ஐரோப்பிய விண்வெளி முகவரகம் தெரிவித்துள்ளது. தரை மற்றும் கடல் வெப்பநிலைகளை செய்மதிகள் ஊடக ஐரோப்பிய விண்வெளி முகவரகம் கண்காணித்து வருகிறது. (நி)

## ...கொரியாவின் ஏவுகணை சோதனைக்கு
# ...க்கா, தென்கொரியா, ஜப்பான்
# நாடுகள் கூட்டாக கண்டனம்

...க்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் கூட்டாக கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆசியான் மாநாட்டின் போது அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அண்டனி பிளிங்கன், ஜப்பானிய வெளி விவகார அமைச்சர் ஹயாஷி மற்றும் தென் கொரிய வெளிவிவகார அமைச்சர் பார்க் ஜின் ஆகியோர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் வடகொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை பரிசோதித்தது. கிழக்கு கடற்கரை பகுதியில் ஏவப்பட்ட இந்த ஏவுகணை சுமார் 1000 கிலோமீற்றர் தூரத்தை ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பயணித்தது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் பல விதிமுறைகளை வடகொரியா தெளிவாக மீறியுள்ளதாக அமெரிக்கா, தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை


# கர்ப்பிணித் தாய்மாரின் பாரம்பரிய உணவு வழக்கங்கள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

குழந்தை ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் தாயின் ஆரோக்கியம் அவசியம். ஆரோக்கியமான ஒரு தாயால் தான் ஆரோக்கியமான ஒரு குழந்தையை பெற்று எடுக்க முடியும்.எனவே தாய் - சேய் நலனில் அக்கறை செலுத்துதல் அவசியமாகும். இந்த அடிப்படையில் ஒரு பெண் கருவுற்றதில் இருந்து தாய்ப் பாலூட்டும் காலம் வரை அவள் மீது விசேட கவனம் செலுத்துதல் முக்கியமாகும். கருவுற்ற காலத்திலே தகுந்த உணவுகளை தெரிவு செய்து உண்பதன் மூலம் குழந்தையின் வளர்ச்சி சீராக அமையும். மேலும் தாயின் உடல் நிலை ஆரோக்கியமாக இருப்பதுடன் குழந்தை பிறந்த







பின் அதற்குப் பாலூட்டும் சிறப்பு தன்மையையும் ஒரு பெண் பெறுகிறாள்.

கருவுற்ற காலத்திலும் பாலூட்டும் காலத்திலும் தாயானவள் தனக்கு மட்டுமன்றி குழந்தைக்கும் சேர்த்தே உணவை உண்கிறாள் என்பதை ஞாபகத்தில் வைத்திருத்தல் அவசியமாகும். கர்ப்பிணி பெண்களும் பாலூட்டும் தாய்மார்களும் அதிகம் சாப்பிடுவது மட்டும் முக்கியமல்ல. சத்துள்ள உணவுகளைத் தெரிவு செய்யும் போது அதில் சுண்ணாம்புச் சத்து, இரும்புச்சத்து, உயிர்ச்சத்துக்கள் என்பன அதிகம் இடம்பெறுதல் வேண்டும்.

எமது மூதாதையர் கர்ப்பிணிப் பெண்களையும் பாலூட்டும் தாய்மார்களையும் ஆரோக்கியமான உணவுப்பழக்கங்கள் மூலம் பராமரித்துள்ளார்கள். எமது பாட்டிமார் கையாளும் பழக்கவழக்கங்கள் அனைத்தையும் நாம் மூடத்தனமானவை என்று எண்ணுதல் தவறாகும். விஞ்ஞான ரீதியாக ஏற்றுக்கொள்ளக் கூடிய பழக்கங்களும் அவர்களால் கையாளப்பட்டுள்ளதை எவராலும் மறுக்க முடியாது.

கர்ப்பமுற்ற பெண்களின் மனநிலை நல்ல நிலையில் இருத்தல் வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் வளைகாப்பு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. வளைகாப்பு சார்பாக முதலில் போடுவது வேப்பம் இலைக்காம்புகளால் ஆக்கப்பட்ட காப்பு ஆகும். இப்பழக்கமானது விஞ்ஞான மருத்துவ அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக் கூடிய பழக்கமாகவே உள்ளது.

கர்ப்பமுற்ற பெண்களுக்கு "அஞ்சு பஞ்சலம்"காப்பு இடுதல் என்ற பழக்கமும் மக்களிடையே காணப்பட்டது. வேப்பங் காப்பிற்கு பிறகு அஞ்சு பஞ்சலம் காப்பு (ஐம்பொன்) என்ற காப்பை போடுவார்கள். இக்காப்பில் ஐவகை உலோகங்களும் கலந்திருக்கும். அவையாவன: தங்கம். வெள்ளி, இரும்பு, செப்பு, பித்தளை. இந்த ஐந்து வகை உலோகங்களும் கர்ப்பமுற்ற பெண்களின் உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கும்.

கர்ப்பமுற்ற பெண்ணுக்கு வசம்பு வைத்துக் கட்டும் பழக்கம் காணப்படுகிறது. வசம்பு பொதுவாக "பிள்ளை வளர்ப்பான்" என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. குழந்தைகளுக்கு எந்த நோய் வந்தாலும் நோய் வராமல் காக்கவும் வசம்பு பயன்படுகின்றது. வசம்பிற்கு கிருமிநாசினி மருத்துவத் தன்மை உண்டு. கருவிலிருக்கும் குழந்தையை நோய் தாக்குவதை தவிர்க்கவும் தாயை நோயிலிருந்து பாதுகாக்கவுமே தாய்க்கு வசம்பு கட்டப்படுகின்றது.

கர்ப்பிணிப் பெண்களுக்கு உளுந்து, நல்லெண்ணெய் சேர்ந்த உணவுகள் அதிகம் கொடுக்கப்படுகின்றன. உளுந்தானது கரு வளர்ச்சியடைவதற்கு உதவுவதுடன் கருப்பை இடுப்பென்புகளுக்கு பலத்தை கொடுக்கின்றது. அதன் மூலம் பிரசவத்தையும் இலகுவாக்குகின்றது. நல்லெண்ணெயில் உயிர்ச்சத்து ஏ இருப்பதால் தாய்க்கும் சேய்க்கும் மாலைக் கண் நோய் ஏற்படாமல் பாதுகாக்கின்றது.

ஆறாம் மாதத்திற்கு பின்பு எள்ளு, பனங்கட்டி, உளுத்தம்மா என்பனவற்றை சேர்த்திடித்த எள்ளுப்பாகு இடைக்கிடை உண்ணக் கொடுப்பர். எள்ளு, பனங்கட்டி என்பனவற்றில் இரும்புச்சத்து, கல்சியம் என்பன அதிகம் காணப்படுகின்றன. எனவே இவை தாய்க்கும் சேய்க்கும் போசாக்குணவாக அமைகின்றது.

வள்ளல் கீரைக்கு முலைப் பாலை சுரக்கச் செய்யும் இயல்பும் அதிகமுள்ளதால் வள்ளல் தாய்போல் பிள்ளையை வளர்க்கும் என்று முதுமொழியும் உண்டு. காப்பிணிப்பெண்களுக்கு காலை,மாலை இரு நேரமும் வற்றக் காய்ச்சிய பசும் பாலை அருந்தக் கொடுப்பார்கள் இதனால் உடலில் ஏற்படும் பல நோய்களும் மாறும்.

உணவின் பகுதியை
ப யோதலுற் றனமினிப்
பணிவுள்ள வெண்பசும்
பாலிகாப்பாற்று.
யோற்பான செம்பசு
போக்குங் கர்ப்பிணி
புள்ளியா மேகநோய்
போக்கிடு மட்டபால்
விடா தொடர் காத்திர
வெம்மையை மாற்றுமே
(தேரன் காப்பியம்)

வெண்மையாகிய பசுவின் பால் களைப்பைப் போக்கும். காராம்.பசுவின் பால் தாகத்தை தணிக்கும். செம்மை நிறமுள்ள ஆவின் பால் கசரோகத்தையும் புள்ளிகளுடைய பசுவின் பால் மேகரோகத்தையும் போக்கும். காய்ச்சாத பால் பசி தீபனத்தை உண்டாக்கும். காய்ச்சிய பால் சரீரத்தில் உள்ள வெப்பத்தைத் தணிக்கும். உடலுக்குள்ளே பால் சென்றவுடனே வெள்ளை அணுக்கள் அதிகப்பட்டு நோயெதிர்ப்பு சக்தியை கூட்டுகின்றது. எனவே, பொதி செய்யப்பட்ட பால்மா வகைகளுக்கு பதில் பசுப்பால் மிகவும் சிறந்தது. கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஐந்தாம் மாதந்தின் பின்பு பாலுடன் சிறிதளவு குங்குமப்பூ கலந்து கொடுக்கப்படுகின்றது.

இதன் மருத்துவக் குணங்கள் இரத்தத்தைச் சுத்திகரித்து பிரசவ வேதனையை குறைத்து பிரசவத்தை இலகுவாக்கவும் பிரசவித்த பின்பு கருப்பையில் ஏற்படும் இரத்த தோஷங்களை நீக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. பலர் குழந்தை சிவப்பாகப் பிறக்க வேண்டும் என்பதற்காக குங்குமப் பூவை பயன்படுத்துகின்றார்கள். இதில் எவ்வித உண்மையுமில்லை.

கருப்பையில் கரு வளர்வதன் நிமித்தம் ஏற்படும் மாறுதல்களால் கர்ப்பிணிப் பெண்களுக்கு வித்தியாசமான உணவுகளில் ஆசை ஏற்படும். அதனை "யா" என்று அழைப்பர். ஆனால் மசக்கை வேறு. இது முதல் மூன்று மாதங்கள் ஏற்படும். இதில் புளிப்புச்சுவையின் மீது விருப்பம் அதிகரிக்கும்.

இதற்குத்தான் உறவினர்கள் சிவத்தப் பச்சரிசிமா, உளுத்தம்மா,பயற்றம்மா, கடலைமா போன்றவற்றால் பல்வேறு பலகாரங்கள் செய்து கர்ப்பிணிகளுக்கு கொடுப்பார்கள்.

இதில் தேவையான அளவு புரதச்சத்து கிடைப்பதுடன் சிவத்தப் பச்சரிசி, முளைவிட்ட பயறு காணப்படுகின்றன.

இது குருதிக்கலங்கள் முதிர்ச்சியடைவதற்கும் குறைபாடுள்ள குழந்தைகள் (மூளை முண்ணான் பாதிப்பு) பிறப்பதை தவிர்ப்பதற்கும் அவசியமாகின்றது.

முருங்கையிலை, பொன்னாங்காணி, வல்லாரை, முல்லை, முசுட்டை, வள்ளல் கீரை, தவசி முருங்கை பெண்களின் உணவில் தாராளமாக சேர்த்துக் கொள்வர். இவை அவர்களுக்கு தேவையான உயிர்ச்சத்துக்கள்,இரும்புச்சத்து, கல்சியம் முதலியவற்றை வழங்குவதுடன் மலம் சாதாரணமாக இளகி வெளியேறவும் உதவுகின்றன.

குழந்தை பிறந்தவுடன் தாய்க்கு சாராய ஊறல் கொடுக்கும் குடும்ப வழக்கமானது மரபு வழியாக மக்களால் பயன்படுத்தப்படுகின்றது. இதில் சாதிக்காய், கராம்பு, ஏலம்,வசுவாசி,கறுவா, திப்பிலி, வெந்தயம், சீரகம், இலவங்கம், உள்ளி, கோட்டம்,அதிமதுரம்,மல்லி, சிறுநாகம்பூ, குங்குமப்பூ, வால் மிளகு, கற்கடகசிங்கி, சிறு தேக்கு, ஓமம், வாய்விடங்கம் என்பன சேர்க்கப்படும்.

இவை ஒவ்வொன்றும் ஐந்து கிராம் அளவு எடுத்து இடித்து அரித்து இரண்டு போத்தல் சாராயத்தில் ஊறப் போட்டு சேறான நிலத்தில் அல்லது நெல்லினுள் 40 நாட்கள் வரை புதைத்து வைத்து எடுத்து குழந்தை பிறந்த பின்பு 2-3 நாட்களுக்கு பின் தினம் ஒரு வேளை ஒரு தேக்கரண்டி விதம் முப்பது நாட்கள் கொடுக்கப்படுகின்றது. இதிலுள்ள மூலிகைகள் கர்ப்பப்பையை பலப்படுத்தி, அழுக்குகளை அகற்றி தாய்ப்பாலையும் அதிகம் சுரக்க வைக்கின்றது .

பிரசவித்த தாய்க்கு குழந்தை பிறந்து ஐந்தாம் நாளிலிருந்து 21 ஆம் நாள் வரை சாரணை வேர் ஒரு துண்டு, சுக்கு ஒரு துண்டு, சுட்ட உள்ளி 3 பல்லு, மஞ்சள் 36 துண்டு போட்டு அம்மியில் மைபோல் அரைத்து சிறு சிறு உருண்டை ஆக்கி 5-6 உருண்டைகளை பனங்கட்டியுடன் விழுங்கக் கொடுப்பர். இதனால் கருப்பை வலுவடைவதுடன் தாய்க்கும் சேய்க்கும் மலம் இலகுவாக வெளியேறுவதுடன் தாய்ப்பாலும் நன்கு சுரக்கின்றது.

பிரசவித்த பெண்ணின் உணவு முறையுடன் அவளின் குளிப்பும் முக்கிய இடம்பெறுகிறது. வேப்பம் பட்டை, பாவட்டை இலை, மாவிலங்கம்பட்டை, நொச்சியிலை போன்றவற்றை அவித்து குளிக்க வார்க்கப்படுகிறது. சிறந்த மருத்துவ குணாங்களும் மேற்படி மூலிகைகளுக்கு உண்டு. இம் மூலிகை பாகங்களால் மார்பகங்களை அழுத்தி தேய்த்து உரஞ்சி ஒத்தடம் கொடுக்கும் போது மார்பகங்களுக்கு இரத்த ஓட்டம் பெருகி பாற்சுரக்கும் சுரப்பியின் கண்கள் விரிவடைந்து தாய்ப்பாலை அதிகம் சுரக்கச் செய்யும்.

தாய்பால் குறைவாகச் சுரக்கும் பெண்களுக்கு 15 கிராம் உள்ளிப்பூண்டை எடுத்து தோல் நீக்கி வறுத்து அதனுடன் பனங்கற்கண்டையும் சேர்த்து உண்ணக் கொடுத்துவரின் முலைப்பால் அதிகம் சுரக்கும். இதனையே "ஏந்திழைக் கிருள்ளி யேற்ற முலைப்பாலே" என்று பழமொழியும் சுட்டிக்காட்டுகிறது. மருத்துவ நோக்கில் கர்ப்பகால மூலிகை பாவனையின் பொதுக்குணாங்கள்

**சாதிக்காய்:-**

"தாது தட்டம் பேதி கருவாகி வஞ்சிர நோய் ஒது கலா சங்காரம் உட்கிரனி - லேதோடு இலக்காய் வரும் பிணிபோம் ஏற்றமயல் பித்தந் துலக்கியருந்துவர்க்குக் கூறு.

இதனால் விந்துக் குறைவு, பெருங்கழிச்சல், வாயுவினால் உண்டாகும் நோய், தலைவலி, இரைப்பு (ஆஸ்மா), இருமல் நாட்பட்ட கழிச்சல், வெப்பத்தை முன்னிட்டு வரும் பிணிகள் போகும்.

வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், அக்கினி மந்தம் நீங்கும். மேற்குறிப்பிட்ட முறைகளை கடைப்பிடித்து ஆரோக்கியமாக வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூர் மலையில் அராஜகம்

# தமிழர்களை பாதுகாக்க அரசு தயாரில்லை என்பதற்கான மற்றுமொரு எடுத்துக்காட்டு

## சர்வதேச அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

**குருந்தூர் மலை பொங்கலை குழப்ப முயன்றவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்த தவறியுள்ளமை அரசிற்குள் சிங்கள-பௌத்த தேசியவாதம் ஆழமாக வேரூன்றியுள்ளதை புலப்படுத்துகின்றது என இலங்கையில் சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான அமைப்பு (பேர்ள்) தெரிவித்துள்ளது.**




குருந்தூர் மலை ஆலயத்தில் பொங்கல் பொங்குவதை பௌத்தமத குருமார் தலைமையில் சிங்கள கும்பலொன்று தடுக்க முயன்றமை, அச்சுறுத்தியமை இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களை பாதுகாக்க தயாரில்லை என்பதற்கான மற்றுமொரு எடுத்துக்காட்டு என பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

பொங்கலை தடுத்து நிறுத்துவதற்காக கடந்த 11 ஆம் திகதி பௌத்த மதகுரு ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

முல்லைத்தீவு நீதிமன்றம் அதனை நிராகரித்துள்ள போதிலும் அந்த நிகழ்வை தடுத்து நிறுத்துவதற்காக பௌத்த மதகுருமார் உட்பட 100 பேருக்கு மேல் குருந்தூர் மலையில் ஒன்று திரண்டார்கள்.

அந்த நிகழ்வை குழப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியை பொலிஸார் தடுத்து நிறுத்த தவறியமை அரசிற்குள் சிங்கள-பௌத்த தேசியவாதம் ஆழமாக வேரூன்றியுள்ளதை புலப்படுத்துகின்றது எனவும் பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது. (நி)

### நீண்டகாலமாக சேதமடைந்திருந்த பாலத்தினை புனரமைப்பு செய்த தருமபுரம் இளைஞர்கள்



(தருமபுரம்)

நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாமல் இருந்த பாலத்தினை தருமபுரப் பகுதி இளைஞர்கள் தமது சொந்த நிதியை பயன்படுத்தி புனரமைப்பு செய்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் அலுவலக வளாகத்திற்கு மிக அண்மையாக உள்ள பாலமானது பல வருடங்களாக புனரமைப்பின்றி போக்குவரத்து செய்ய முடியாமல் காணப்பட்டது.

இதனால் மக்கள் தற்காலிக பாதை ஒன்றினையே போக்குவரத்திற்காக பயன்படுத்தி வந்தனர். பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதும் பாலம் புனரமைப்பு செய்து தரப்படாத காரணத்தால் நேற்று ஞாயிற்றுக்கிழமை தருமபுர இளைஞர்கள் அணியினர் ஒன்று திரண்டு தமது சொந்த நிதியில் கிரவல் மூலம் சேதமடைந்த பகுதிகளை புனரமைப்பு செய்து போக்குவரத்துக்கு வழி செய்துள்ளனர். (நி-316)





மலையகத்தில் ஏற்பட்ட வன்செயல்களால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லையோர கிராமங்களில் குடியேறிய மாணவர்களுக்கு கல்வியை வழங்கும் வகையில் உருவாக்கப்பட்ட கிளி-சிவபாத கலையகம் அ.த.க பாடசாலையின் நாற்பதாவது வருட ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன. (படங்கள்:-யதுபாஸ்கரன்)

### காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரிப்பு

(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடு நகர் பகுதியில் தொடர்ச்சியாக காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புகள் மற்றும் பயன் தரும் மரங்களிற்கு அழிவினை ஏற்படுத்தி வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவும் இரண்டு முதியவர்கள் தனிமையில் வசித்து வந்த நிலையில் அவர்கள் வீட்டு முற்றத்தில் நின்ற பலா மரம் ஒன்றை முறித்து வீட்டின் மேல் விழுத்தியதில் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

தற்பொழுது அவர்கள் அயலவர் வீட்டிலே வசித்து வருகின்றனர். இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (நி-316)

### சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 260 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 240 | 240 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 500 | 600 |
| தக்காளி | 400 | 450 | 550 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 220 | 300 |
| கோவா | 300 | 230 | 280 | 300 |
| கரட் | 400 | 500 | 520 | 600 |
| பூசணி | 120 | 120 | 100 | 140 |
| புடோல் | 140 | 160 | 160 | 200 |
| வாழைக்காய் | 160 | 150 | 180 | 150 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 480 | 550 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 160 |
| பாகற்காய் | 400 | 300 | 350 | 500 |
| வெண்டக்காய் | 250 | 180 | 140 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 170 | 180 | 250 |
| பயற்றங்காய் | 200 | 350 | 200 | 200 |
| லீக்ஸ் | 250 | 280 | 280 | 280 |
| பீற்றூட் | 400 | 300 | 380 | 350 |
| கறிமிள்காய் | 350 | 300 | 420 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 450 | 380 | 400 |
| போஞ்சி | 550 | 450 | 480 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 100 | 100 |
| தேசிக்காய் | 300 | 200 | 160 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 75-80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 260 | 250 | 280 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 150 | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 40 | 40 | 60 |
| ஈரப்பலா | 160 | 200 | — | 180 |

### கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது

#### நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை

(தருமபுரம்)

பூநகரி செல்விபுரம் பகுதியில் சட்ட விரோத மதுபானம் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது செய்யபட்டுள்ளனர். 55 லீற்றர் கசிப்புடனும் வடிக்க பயன்படுத்தபட்ட பரல் உள்ளிட்டவற்றுடன் செல்விபுரம் பகுதியை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

பூநகரி விசேட புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த புலனாய்வு தகவலின்படி கைது செய்யப்பட்ட இவர்களை கிளிநொச்சி நிதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 231






பண்டங்களை ஏற்றுமதி செய்வதற்காக வந்த வர்த்தகர்களின் கூட்டத்தைக் காட்டிலும் சிற்பச் செல்வங்களைக் கண்டு களித்துப் போவதற்காக வந்த ஜனக் கூட்டம் அதிகமாயிருந்தது.

மாமல்லபுரத்து வீதிகளின் வழியாக இரட்டைக் குதிரைகள் பூட்டிய அழகிய விமான ரதம் ஒன்று சென்றது. குதிரைகளின் அலங்காரங்களும் ரதத்தின் வேலைப்பாடுகளும் பொன் தகடு வேய்ந்து மாலை வெயிலில் மற்றொரு சூரியனைப் போல் பிரகாசித்த ரதத்தின் மேல் விதானமும் அதில் இருந்தவர்கள் அரச குலத்தினராயிருக்க வேண்டும் என்பதை உணர்த்தின.

ஆம் அந்தப் பொன் ரதத்தின் விசாலமான உட்புறத்தில் அரசகுலத்தினர் மூவர் அமர்ந்திருந்தார்கள். அவர்களில் ஒருவன் தான், வீராதி வீரனும் சுந்தர சோழரின் மூத்த குமாரனுமான ஆதித்த கரிகாலன். மிக இளம்பிராயத்திலேயே இவன் போர்க்களத்துக்குச் சென்று செயற்கரும் வீரச் செயல்கள் புரிந்தான். மதுரை வீரபாண்டியனை இறுதிப் போரில் கொன்று, "வீரபாண்டியன் தலை கொண்ட கோப்பரகேசரி" என்று பட்டப் பெயர் பெற்றான். வீரபாண்டியன் வீர சொர்க்கம் அடைந்து பாண்டிய நாடு சோழ சாம்ராஜ்யத்தின் கீழ் வந்த உடனடியாகத்தான் சுந்தரசோழர் நோய்வாய்ப்பட்டார். ஆதித்த கரிகாலனே அடுத்த பட்டத்துக்கு உரியவன் என்பதை ஐயமற நிலைநாட்ட அவனுக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்தார். அது முதலாவது கல்வெட்டுக்களில் தன் பெயரைப் பொறித்துச் சாஸனம் அளிக்கும் உரிமையும் ஆதித்த கரிகாலன் பெற்றான்.

பின்னர், தொண்டை மண்டலத்தை இரட்டை மண்டலத்துக் கன்னர தேவனுடைய ஆதிக்கத்திலிருந்து முழுதும் விடுவிக்கும் பொருட்டு ஆதித்த கரிகாலன் வடநாட்டுக்குப் பிரயாணமானான். அங்கேயும் பல போர்க்களங்களில் செயற்கரும் வீரச் செயல்களைப் புரிந்தான். இரட்டை மண்டலத்துப் படைகளை வட பெண்ணைக்கு வடக்கே துரத்தியடித்தான். மேலும் வடதிசையில் படையெடுத்துச் செல்வதற்குப் படை பலத்தைப் பெருக்கிக் கொள்ளுதல் அவசியமாயிற்று. ஆதலின் காஞ்சியில் வந்து தங்கிப் படை திரட்டவும் மற்றும் படையெடுப்புக்கு அவசியமான ஆயுத தளபாட சாமக்ரியைகளைத் திரட்டவும் தொடங்கினான். இந்த நிலையில் பழுவேட்டரையர்கள் அவனுடைய முயற்சிக்குத் தடங்கல் செய்யத் தொடங்கினார்கள். இலங்கைப் போர் முடிந்த பிறகுதான் வடநாட்டுப் படையெடுப்புத் தொடங்கலாம் என்று சொன்னார்கள். இன்னும் பலவிதமான வதந்திகளும் காற்றிலே மிதந்து வரத் தொடங்கின. இலங்கையில் போர் செய்யச் சென்றுள்ள படைக்குச் சோழ நாட்டிலிருந்து வேண்டிய உணவுப் பொருள் போகவில்லையென்று தெரிந்தது. இதனாலெல்லாம் ஆதித்த கரிகாலனுடைய வீர உள்ளம் துடித்துக் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

நமது கதை நடந்த காலத்துக்கு முன்னும் பின்னும் சுமார் முந்நூறு ஆண்டு காலத்தில் தமிழ் அன்னையின் திருவயிற்றில் இதிகாச காவியங்களில் நாம் படிக்கும் மகா வீரர்களையொத்த வீரப் புதல்வர்கள் தோன்றிக் கொண்டிருந்தார்கள். வீமனையும் அர்ச்சுனனையும் பீஷ்மரையும் துரோணரையும் கடோத்கஜனையும் அபிமன்யுவையும் ஒத்த வீரர்கள் தமிழகத்தில் அவதரித்தார்கள். உலகம் வியக்கும்படியான தீரச் செயல்களைப் புரிந்தார்கள். போரில் அடைந்த ஒவ்வொரு வெற்றியும் இவர்களுடைய தோள்களுக்கு மேலும் வலி அளித்தன. வயது முதிர்ந்த கிழவர்கள் மலையைப் பெயர்த் தெடுக்கும் வலிமை பெற்றிருந்தார்கள். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## சிங்கத்தை ஏமாற்றிய முயல்

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அது அங்கிருந்த பிராணிகளை தன் உணவுக்காக தொடர்ந்து வேட்டையாடியது. இதனால் காட்டில் உள்ள பிராணிகள் பயத்துடனேயே வாழ்ந்து வந்தன. நாளுக்கு நாள் சிங்கத்தின் தொல்லை அதிகரித்தது. அதனால் எல்லாப் பிராணிகளும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தன. சிங்கத்திடம் சென்று, நீங்கள் சாப்பிடுவதற்காக எங்களில் ஒருவர் ஒவ்வொருநாளும் உங்கள் இரு ப்பிடத்துக்கு அனுப்பி வைக்கப்படுவர். இனிமேல் வேட்டையாடுவதற்கு வெளியில் வர வேண்டிய அவசியம் இல்லை என்றது. அதற்கு சிங்கமும் சரி என்றது.

முயல் செல்ல வேண்டிய முறை வந்தது.



நண்பர்களே! எனக்கு சற்று அவகாசம் தாருங்கள். எனது தந்திரத்தால் நீங்களும் சிங்கத்தின் அநியாயத்திலிருந்து தப்ப வழி பிறக்கும். வருங்கால சந்ததிகள் காட்டில் நிம்மதியாக வாழ முடியும் என்றது.

பிறகு முயல் தாமதமாகச் சிங்கம் இருக்கும் இடத்திற்கு சென்றது. சிங்கம் முயலை நோக்கி அட அயோக்கியப்பயலே, அறிவு கெட்டவனே ஏன் இவ்வளவு தாமதம்? என்று கேட்டது. முயல், அரசே நான் வரும் வழியில் என்னை இன்னொரு சிங்கம் தாக்க வந்தது. அதனிடம் இருந்து நான் தப்பித்து வர தாமதமாகி விட்டது என்றது.

என்னைப்போல் ஒருவனா? இந்த காட் டிற்கு நான் மட்டும் தான் ராஜாவாக இரு க்க வேண்டும். முதலில் அவனை அழித்தால் தான் நமக்கு தினமும் சரியாக உணவு கிடைக்கும். என்று சிங்கம் நினைத்தது. அதனால் புதிதாக காட்டுக்குள் வந்திருப்பவனை கொல்ல நினைத்து முயலிடம் அவன் இருக்கும் இடத்தைக் காட்டு. முதலில் அவனைக் கொன்று விட்டுப் பிறகு உன்னை சாப்பிடுகிறேன் என்றது.

முயல் தந்திரமாக சிங்கத்தை தூரத்தில் தெரியும் கிணற்றுக்கு அழைத்துச் சென்றது. இந்த கிணற்றில் தான் அந்த சிங்கம் பதுங்கியிருக்கிறது என்றது. சிங்கம் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தது. அதில் சிங்கத்தின் முகம் தெரிந்தது. அது தன்னுடைய முகம் தான் என்று அறியாத சிங்கம் தன்னுடைய எதிரி என்று நினைத்து அவனை அழிக்க நினைத்து கிணற்றுக் குள் குதித்தது.

சிங்கம் கிணற்றுக் குள் விழுந்த பின் முயல் மற்றப் பிராணிகளை நோக்கி சந்தோஷத்தால் துள்ளிக் குதித்து ஓடியது. சிங்கம் இறந்து போனது. மற்றப் பிராணிகளிடம் சென்று நம்முடைய எதிரி அழிந்து விட்டான் என்று சந்தோசத்தில் கத்திச் சொன்னது. முயலின் இச் செய்தியைக் கேட்ட பிராணிகள் அனைத்தும் ஒன்று கூடி, மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன. காட்டு மிருகங்கள் அனைத்தும் முயலுக்கு மரியாதை செய்தன. அனைத்து மிருகங்களும் நிம்மதியாக வாழ்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் வெற்றி என்பது ஒரு மனிதன் பின்பற்றும் சத்தியத்தைப் பொறுத்தது.
– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம் மக்களை ஆற்றுப்படுத்திய ஆன்மீக குரு நகுலேஸ்வரக் குருக்கள்

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள் தேக வியோகம் அடைந்தார் என்ற செய்தி நெஞ்சத்தை நெருட வைக்கிறது.

98 ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்த நகுலேஸ்வரக் குருக்கள் ஆயிரம் பிறை கண்ட அண்ணல் எனும் பெருமைக்குரியவர்.

அவரின் சிவப் பணியை சிவபூமியாகிய ஈழத் திருநாடு ஒருபோதும் மறந்துவிடமாட்டாது.

ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரம் யுத்த காலத்தில் மிகப்பெரும் சேதங்களையும் இன்னல்களையும் சந்தித்தது.

கீரிமலை காங்கேசன்துறைப் பகுதி மிக நீண்டகாலமாக யுத்த சூனியப் பிரதேசமாக இருந்ததுடன் அங்கு எவரும் செல்ல முடியாத சூழ்நிலையும் காணப்பட்டது.

வரலாற்றுச் சிறப்பம்சம் பொருந்திய கீரிமலை நகுலேஸ்வரம் எங்கள் ஈழத் திருநாடு, சிவபூமி என்பதற்கான சான்றாதாரங்களில் ஒன்று.

இருந்தும் எங்கள் நகுலேஸ்வரப் பெருமானின் ஆலயம் எங்கள் வழிபாட்டுக்கு கிடைக்காமல் போய்விடுமோ என்ற ஏக்கம் சைவ மக்களை மிகவும் வருத்தியது.

எனினும் ஆலய ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் நகுலேஸ்வரர் ஆலயத்தை மீட்டெடுக்கத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தை எப்பாடுபட்டாவது பாதுகாக்க வேண்டும் என்ற வேணவாவில், அரச தரப்புக்கும் படைத் தரப்புக்கும் இன்னும் சர்வதேச அமைப்புகளுக்கும் கடிதங்களை அனுப்பி ஆலயத்தைப் பார்வையிடுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தினார்.

யுத்த அழிவில் சிதைந்து கிடக்கும் கட்டிடங்கள், பற்றைகளின் ஆக்கிரமிப்பில் மறைந்து கிடக்கும் வாழ்விடங்கள், எங்கும் யுத்த தளபாடங்கள், முட்கம்பி வேலிகள், இராணுவப் பாதுகாப்பு அரண்கள் என மிகப்பெரும் பயங்கரமான களநிலையைத் தாண்டி கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தைச் சென்று பார்த்த நகுலேஸ்வரக் குருக்கள் ஆலய விக்கிரகங்களை மீட்டெடுப்பதிலும் அவற்றைப் பாதுகாப்பதிலும் முழுமையாக ஈடுபட்டார்.

அன்று அவர் ஆற்றிய அப்பெரும் தவம் எம் மண்ணுக்கு மீளவும் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தைத் தந்தருளியது.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பிரகடனத்துக்குள் அகப்பட்டிருந்த கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய முன் மண்டபத்தில் குந்தியிருந்து அங்கு வருகின்ற அடியவர்களை ஆற்றுப்படுத்தி ஆன்மீக தானம் செய்த நகுலேஸ்வரக் குருக்களின் பெரும் பணியை ஆலயத்தின் நீண்டுயர்ந்த இராஜகோபுரம் எடுத்தியம்பும்.

ஆம், தனது சிவப்பணி மூலம் ஆத்மீக தானத்தை வழங்கிய நகுலேஸ்வரக் குருக்கள் எங்கள் மண்ணில் அடியவர்களை ஆற்றுப்படுத்திய ஆன்மீக குரு.

பிரதோச விரத நாளில் – உத்தராயணம் எனும் மோட்ச காலத்தில் தேகவியோகம் அடைந்த எங்கள் வழிபாட்டுக்குரிய நகுலேஸ்வரக் குருக்களின் சிவாத்மா நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமானின் பொன்னார் திருவடிகளில் வீற்றிருந்து எங்களை ஆசீர்வதிக்கப் பார்வதி பரமேஸ்வரப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

### தீவக வலய பாடசாலையில்
# ஒன்பது வயது மாணவியை தாக்கிய அதிபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தீவகப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 4 இல் கல்விகற்கும் 9 வயது மாணவியைத் தாக்கிய குற்றச்சாட்டில் பாடசாலை அதிபரை ஊர்காவற்துறை பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

மாணவியை பாடசாலையில் வைத்து அதிபர் கடுமையாக தாக்கியதில் மாணவியின் உடலில் தழும்புகள் ஏற்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் மனித உரிமை ஆணைக் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் மாணவி தாக்கப்பட்டமை குறித்து மனித உரிமை ஆணைக் குழு பொலிஸாரிடம் வினாவியபோது, தாம் அதிபரை கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் இன்று ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் அதிபரை முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை இச்சம்பவம் தொடர்பிலான உத்தியோகபூர்வ விசாரணைகளை இன்று திங்கட்கிழமை முன்னெடுக்கவுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்துள்ளார். (4-7,104)

### மர்ம நபர்கள் கொடுத்த
## கேக்கை உண்டதில் மயங்கி விழுந்த குடும்பம்

(புத்தளம்)

புத்தளம் நகரிலுள்ள வீடொன்றுக்கு வந்த மர்மநபர்களால் வீட்டிலிருந்தவர்களுக்கு வழங்கப்பட்ட கேக்கை சாப்பிட்டதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரும் மயங்கி விழுந்த நிலையில் அவர்களை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக புத்தளம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்கள் இதய சத்திரசிகிச்சைக்கு உள்ளான இந்த வீட்டின் உரிமையாளரிடம் நிதி நிறுவனம் ஒன்றின் மூலம் 50,000 ரூபாவை வழங்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் உரிய காசோலையை வழங்குவதற்கு முன் தாம் கொண்டு வந்த கேக்கை சாப்பிட்டு; அதை படம் பிடித்து காசோலை வழங்க தயாராக உள்ள நிறுவனத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அவர்கள் ஒரு சிறிய கேக்கை மட்டும் சுவைத்ததாகவும், எதையும் குடிக்கவில்லை என்றும் வீட்டின் உரிமையாளரான இதய நோயாளி கூறுகிறார். மீதி கேக் மற்றும் பானங்களை குடித்த சிறிது நேரத்தில் மனைவி, மகள், தந்தை மற்றும் தாய் மயங்கி விழுந்ததைக் கண்ட வீட்டு உரிமையாளர், உடனடியாக புத்தளம் நகரில் வேலை செய்யும் மூத்த மகளுக்கு போன் செய்துள்ளார்.

மகளுக்கு போன் செய்ததையடுத்து பதற்றத்துடன் வீட்டுக்கு வந்த இரண்டு சந்தேக நபர்களும் வேகமாக வீட்டை விட்டு ஓடியதாகவும் பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருவதோடு இவ்வாறான நூதன திருட்டுக்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர. (4-7)

## மூடி தொண்டையில் சிக்கி ஒரு வயது குழந்தை பலி

(அக்குரஸ்ஸ)

அக்குரஸ்ஸ - தலாகம பகுதியில் போத்தல் மூடி தொண்டையில் இறுகியமையால் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் குறித்த குழந்தை தனது வீட்டில் இந்த அனர்த்தத்திற்கு முகங்கொடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ஒரு வயதும் 15 நாட்களும் நிறைந்த குழந்தையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

அவரது சகோதரர் மூடியை அகற்ற முயன்ற போதும் அது தோல்வியில் முடிந்துள்ளது.

குழந்தை சிகிச்சைக்காக கம்புருபிட்டிய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் அக்குரஸ்ஸ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-7)

### எசல ஊர்வலத்துக்கான
## மின் கட்டணம் செலுத்துமாறு மின்சார சபை அறிவிப்பு

(கொழும்பு)

வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் இந்த வருடம் நடைபெறும் எசல ஊர்வலத்துக்கான மின்சார கட்டணத்தை செலுத்துமாறு அதற்கு பொறுப்பான தியவடன நிலமேக்கு இலங்கை மின்சார சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரச அனுசரணையுடன் இடம்பெறும் தலதா எசல ஊர்வலத்துக்கு வரலாற்றில் முதல் தடவையாக இவ்வாறு கட்டணம் அறவிடக் கோரப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு எசல ஊர்வலத்தில் தலதா மாளிகை உள்ளிட்ட நான்கு பெரிய ஆலயங்கள் மற்றும் ஊர்வலம் செல்லும் அனைத்து தெருக்களுக்குமான மின் விளக்கு அலங்காரத்துக்கான மின்சார செலவு ஒரு கோடியே 32 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.(4-7)

# நோயாளர்களது உயிரைக்காக்கவே ஹெகலிய மீது நம்பிக்கையில்லா பிரேரணை

## முஜிபுர் ரஹ்மான்

(கொழும்பு)

சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளார்.

எனவே ஜே.வி.பி. உட்பட சகல எதிர்க்கட்சிகளும் இவ்விடயத்தில் ஒரே நிலைப்பாட்டில் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலவச சுகாதார சேவை பாரியளவில் மோசமடைந்து செல்கிறது. தனியார் வைத்தியசாலைகளை கண்காணிப்பதற்கான நிறுவனமொன்று காணப்படுகின்ற போதிலும், அரச வைத்தியசாலைகள் எவ்வித கட்டுப்பாடும் இன்றி இயங்கிக் கொண்டிருக்கின்றன.

அதேபோன்று தனியார் மருந்தக மாபியாக்களின் தேவைக்கேற்ப மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபை செயற்பட்டு வருகின்றமை பாரிய அழிவாகும்.

இவர்களின் செயற்பாடுகளால் நோயாளர்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது, அது தொடர்பில் முறைப்பாடு அளிப்பதற்கு கூட வாய்ப்பில்லை.

சுகாதாரத்துறையில் காணப்படும் பிரச்சினைகளை மறைப்பதற்காக குழுக்களை நியமிக்கின்றனர். குழுக்களின் ஊடாக இவற்றை நீண்ட காலத்துக்கு மறைக்க முடியாது என்பதை அமைச்சர் நினைவில் கொள்ள வேண்டும்.

சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிக்குமாறு ஏனைய எதிர்க்கட்சிகளுடன் எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாஸ இன்று பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளார். இதனை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுப்போம்.

ஜே.வி.பி. உள்ளிட்ட கட்சிகளுக்கு எதிர்க்கட்சிகள் ஒரே நிலைப்பாட்டில் செயற்பட வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம் எனத் தெரிவித்தார். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

17

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### மூன்றாம் தப்புலன் (கி.பி 816-831)

மூன்றாம் தப்புலன் என்பவன் அநுராதபுர இராசதானியை 816 ஆம் ஆண்டில் இருந்து 831 ஆம் ஆண்டு வரை ஆண்டு வந்தான். இவன் தனது சகோதரனான எட்டாம் அக்கபோதியின் பின்னர் ஆட்சிபீடம் ஏறினான். இவனின் பின்னர் இவனது மகனான ஒன்பதாம் அக்கபோதி ஆட்சிபீடம் ஏறினான். ஒன்பதாம் அக்கபோதி, முதலாம் சேனன் ஆகியோர் இவனது வாரிசுகள் ஆவர்.

### ஒன்பதாம் அக்கபோதி (கி.பி 831-833)

ஒன்பதாம் அக்கபோதி, அநுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்ட மன்னர்களில் ஒருவன். மன்னன் மூன்றாம் தப்புலனின் மகனான இவன், தந்தை காலமான பின்னர் அரசனானான்.

கி. பி 831 இல் அரியணை ஏறிய ஒன்பதாம்அக்கபோதி 833 வரை ஆட்சியில் இருந்தான். மூன்றாம்தப்புலன் ஆட்சியில் இருந்த போது ஆட்சி உரிமையைத் தன்னுடைய மகனுக்குக் கொடுப்பதற்காக, தமையனின் மகனான மகிந்தனை ஆளுநன் ஆக்கவில்லை. இதனால் மனமுடைந்த மகிந்தன் தன்னுடைய சகோதரர்களுடன் இந்தியாவுக்குச் சென்றுவிட்டான். அரசன் இறந்ததைக் கேள்வியுற்றதும் மகிந்தனும் அவனது சகோதரர்களும் படை திரட்டிக் கொண்டு இலங்கையுட் புகுந்தனர். இதை அறிந்த ஒன்பதாம் அக்கபோதி ஒருபெரிய படையை அனுப்பி அவர்களைத் தோற்கடித்ததுடன் மகிந்தனதும் அவனது சகோதரர்களதும் தலைகளை வெட்டுவித்தான்.

இவன் நீண்டகாலம் ஆட்சியில் இருக்கவில்லை. மூன்று ஆண்டுகளுக்கும் குறைவாகவே ஆட்சியில் இருந்த பின்னர் இவன் காலமானான். இவனுக்குப் பின்னர் இவனது தம்பி முதலாம் சேனன் ஆட்சியில் அமர்ந்தான்.

### முதலாம் சேனன் (கி.பி 833-853)

முதலாம் சேனன் அநுராதபுர இராசதானியை ஆண்ட மன்னர்களில் ஒருவர். இவன் இதற்கு முன் ஆட்சியில் இருந்த ஒன்பதாம் அக்கபோதியின் சகோதரன் ஆவான்.

அக்கபோதி இறந்த பின்னர் கி.பி.833 இல் அரியணை ஏறிய முதலாம் சேனன் கி. பி.853 வரை ஆட்சியில் இருந்தான்.

இவன் தனது முன்னோர்களுடையவழக்கங்களைப் பின்பற்றியும், புதிய நல்ல வழக்கங்களைக் கைக்கொண்டும் நாட்டைச் செவ்வனே ஆண்டு வந்ததாகத் தெரிகிறது. ஆனால், அரியணைக்குப் போட்டியாக இருந்த ஒன்றுவிட்ட சகோதரனான மகிந்தன் என்பவன் இந்தியாவுக்குச் சென்றிருந்த போது அவனைக் கொலை செய்வித்து தனக்கு போட்டி இல்லாமல் ஆக்கினான். இவனுக்கு மகிந்தன், காசியப்பன், உதயன் என மூன்று உடன்பிறந்தோர் இருந்தனர். மகிந்தன் துணை அரசானாகப் பணியாற்றி வந்தான். இவனது ஆட்சிக் காலத்தில் உள்நாட்டில் குழப்பம் உருவாகியது. இதனால், வெளிநாட்டில் இருந்தும் பயமுறுத்தல்கள் இருந்து வந்தன.

இவன் காலத்தில் பாண்டியன் சிறீமாறன் சிறீவல்லபன் இலங்கை மீது படையெடுத்தான். தனது படைகள் தோல்வியுறுவதைக் கேள்வியுற்ற சேனன் எடுக்கக் கூடிய செல்வங்களையும் எடுத்துக் கொண்டு மலைநாட்டுக்குத் தப்பி ஓடினான். பாண்டியப் படைகளை எதிர்க்கச் சென்ற சேனனின் உடன்பிறந்தானும் துணை அரசனுமான மகிந்தன், சிங்களப்படைகள் பின்வாங்கி ஓடி விட்டதைக் கண்டு எதிரியிடம் பிடிபட விரும்பாமல் தனது கழுத்தை தானே வாளால் வெட்டிக் கொண்டு தற்கொலை செய்து கொண்டான். இன்னொரு சகோதரன் காசியப்பன் போரில் கொல்லப்பட்டான். அநுராதபுரத்தைக் கைபற்றிய பாண்டியனுடன் முதலாம்சேனன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டு தொடர்ந்து நாட்டை ஆண்டான். நாட்டின் வட பகுதி பாண்டியர் வசமானது. போர்த் தோல்வியால் இழந்த புகழை மீள்விக்கும் எண்ணம் ஈடேறாமலேயே முதலாம்சேனன் 853 இல் காலமானான்.

### இரண்டாம்சேனன் (கி.பி. 853- கி.பி. 887)

இரண்டாம்சேனன் அநுராதபுர இராசதானியை ஆண்ட மன்னர்களுள் ஒருவன். முதலாம்சேனனின் சகோதரன் காசியப்பனின் மகனான இவன் முதலாம் சேனனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தான். கி.பி 853 இல் அரியணை ஏறிய இரண்டாம் சேனன் கி.பி 887 வரை ஆட்சி செய்தான்.

இளம்வயதிலேயே இவனுடைய வலிமையையும் ஆற்றலையும் கண்ட முதலாம்சேனன் இவனை நாட்டின் தென்பகுதிக்கு ஆளுநன் ஆக்கினான். முதலாம் சேனன் இறந்ததும் தெற்கிலிருந்து அநுராதபுரத்துக்குப் படைகளுடன் வந்த இரண்டாம் சேனன் தன்னைத் தானே அரசனாக அறிவித்துக் கொண்டான்.

இறை பக்தி உள்ளவனாகவும் அதேநேரம் வலிமை கொண்டவனாகவும் செல்வம் பொருந்தியவனாகவும் அதேவேளை பேராசை அற்றவனாகவும் இருந்ததுடன் அறம் செய்வதில் விருப்பம் உள்ளவனாகவும் நல்லியல்புகளைக் கொண்டவனாகவும் வலிமை பொருந்திய படைகளையும் போர்த் தளபாடங்களையும் உடையவனாகவும் நல்லது கெட்டதைப் பிரித்தறியக்கூடியவனாகவும் விடயங்களைப் பற்றி நுணுகி அறியும் திறன் கொண்டவனாக வும் இரண்டாம்சேனன் இருந்தான் என மகாவம்சம் கூறுகிறது. தன்னுடைய சொத்து, வருமானம் முதலியவற்றைத் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கியவுடன், நாட்டின் நலன்கருதி ஆட்சியை மட்டும் தன்னிடம் வைத்துக் கொண்டானாம்.

பாண்டியன் சீமாறன் சீவல்லபன், முதலாம்சேனன் காலத்தில் இலங்கைக்குப் படையெடுத்து அநுராதபுரத்தில் இருந்த புத்தசின்னங்களையும் பெருஞ்செல்வத்தையும் எடுத்துச் சென்றதற்கும் பழிவாங்கும் முகமாகவும் அச்செல்வங்களைத் திருப்பிக் கொண்டு வரும் நோக்குடனும் சீவல்லபனுக்கு எதிராக இயங்கிய (பல்லவ) இளவரசன் ஒருவனுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு பாண்டிய நாட்டின் மீது படையெடுக்க முடிவு செய்தான். தளபதி ஒருவன் தலைமையிலான சிங்களப் படைகள் சீவல்லபனைத் தோற்கடித்து அவனைக கொன்றதுடன், மதுரையையும் சூறையாடி, இலங்கையில் இருந்து பாண்டியனால் முன்னம் எடுத்துச் செல்லப்பட்ட செல்வங்களையும் கிடைத்த பிற செல்வங்களையும் எடுத்துக் கொண்டு இலங்கை மீண்டதாக மகாவம்சம் கூறுகிறது.

அத்துடன், திருப்பிக் கொண்டு வந்த பொருட்கள் அனைத்தும் உரிய இடங்களில் சேர்க்கப்பட்டதாகவும் நாடு பழைய நிலைக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் அந்நூல் எடுத்துரைக்கிறது. ஆனால் மகாவம்சத்தின் கூற்று உண்மையல்ல என்றும் போரில் சிங்களப் படைகள் தோற்றுத் திரும்பியதாகவும் வேறு சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இரண்டாம்சேனன் தனது 35 ஆவது ஆட்சியாண்டில் காலமானான். அவனுக்குப் பின் அவனது தம்பியான உதயன் அரசனானான்.

### முதலாம் உதயன் (கி.பி.887- 898)

முதலாம் உதயன் அநுராதபுர இராசதானியை ஆண்ட மன்னர்களுள் ஒருவன். அவனுடைய ஆட்சி 887 முதல் 898 வரை நீடித்தது. அவன் தனது சகோதரன் இரண்டாம் சேனாவுக்குப் பிறகு ஆட்சி செய்தான். இவனின் பின்னர் இவனது மருமகன் நான்காம் காசியப்பன் ஆட்சிபீடம் ஏறினான்.

### நான்காம்காசியப்பன் (கி.பி.898- 915)

நான்காம் காசியப்பன் அநுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்ட அரசர்களுள் ஒருவன். இவன் இரண்டாம் உதயனுக்குக்குப் பின் அரசுரிமை பெற்றான். இவன் இரண்டாம் உதயனின் தமையனும் முன்னாள் அரசனுமான இரண்டாம் சேனனின் மகன் ஆவான். கி.பி.898 இல் அரியணை ஏறிய இவன் கி. பி.915 வரை ஆட்சியில் இருந்தான். இவன் தனது சிறிய தகப்பன் இரண்டாம் உதயனின் அரசியான திசாவை மணந்து கொண்டு அவளை மீண்டும் தலைமை அரசியாக்கினான். இதனால் திசா இருமுறை முடிசூடிய அரசி என மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகிறாள்.

### 5ஆம்காசியப்பன் (கி.பி. 915-924)

ஐந்தாம்காசியப்பன், அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி புரிந்த சிங்கள அரசர்களுள் ஒருவன். நான்காம் காசியப்பனுக்குப் பின்னர் இவன் அரசனானான். மன்னன் உதயனின் அரசியாக இருந்து பின்னர் நான்காம் காசியப்பனை மணந்து இரண்டாம் முறை அரசியான திசா மூலம் நான்காம் காசியப்பனுக்குப் பிறந்தவனே ஐந்தாம் காசியப்பன். கி.பி.915 இல் அரியணை ஏறிய இவன் கி.பி. 924 வரை ஆட்சியில் இருந்தான்.

### நான்காம்தப்புலன் (கி.பி. 924)

நான்காம்தப்புலன், அநுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்ட மன்னர்களுள் ஒருவன். இவனது தந்தையான ஐந்தாம் காசியப்பன் இறந்த பின்னர், இவன் அரசனானான். கி.பி. 924 இல் அரியணை ஏறிய இவன், ஏழு மாத காலமே பதவியில் இருந்தான். பொதுவாக இவன் முன்னோர்களைப் பின்பற்றியே ஆட்சி நடத்தினான்.

முன்னர் செய்த பாவங்களினால் நீண்ட காலம் இவ்வுலக வாழ்க்கையை அவனால் அனுபவிக்க முடியவில்லை எனக் கூறும் மகாவம்சம் இப்பாவங்கள் குறித்த விபரங்களைத் தரவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலின்...

மணிக்கு வடக்கு அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடல் நடத்துவதற்காக தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை நிராகரிப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

ரணில் அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்வு பேச்சு நடப்பதாக சர்வதேசத்துக்கு காண்பித்து, பொருளாதார உதவிகளை பெற்றுக்கொள்ளவே இந்த பேச்சை நடத்துவதாக தெரிவித்தார். (4-7)

## சங்கிலியன்...

நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாயில் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜின் பிரதிநிதியாக இந்தியத் துணைத்தூதரக அதிகாரி பிரவின் கலந்துகொண்டு தோரண வாயிலைத் திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன் தோரண வாயில் பெயர்ப்பலகையையும் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு.திருமுருகன் எதிர்காலத்தில் தோரண வாயிலில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திக்கான பெயர்ப்பலகையையும் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் ஜெயசீலன் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் எழிலரசி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தமிழர்களின் தொன்மை வரலாற்றை எடுத்தியம்பும் நல்லூரில் அமைந்துள்ள சங்கிலியன் தோரண வாயிலானது யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தால் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-7,33,104)

## மீண்டும் பெரமுன...

குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டபோது தமது எதிர்கால அரசியலை கருத்தில் கொண்டு பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிய ஒரு தரப்பினர் ஹெலிகொப்டர் சின்னத்தில் அரசியல் கூட்டணி ஒன்றை அமைத்தனர்.

ஹெலிகொப்டர் சின்னத்தில் அமைக்கப்பட்ட கூட்டணி செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் ஈடுபடவில்லை. கூட்டணி பிளவடைந்துள்ளது.

எம்மை விட்டு விலகி சென்ற டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையினர் மீண்டும் எம்முடன் ஒன்றிணைய கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

விலகிச் சென்றவர்கள் தாராளமாக எம்முடன் மீண்டும் ஒன்றிணையலாம். சவால்களுக்கு மத்தியிலேயே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தோற்றம் பெற்றது.

ஆகவே எதிர்வரும் காலங்களில் தோற்றம் பெறவுள்ள சவால்களையும் சிறந்த முறையில் வெற்றி கொள்வோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எமக்கும் இடையில் அரசியல் ரீதியில் வேறுபாடு காணப்படலாம். நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொண்டிருந்தவேளை சவால்களை தைரியமாக வெற்றி கொண்டார்.

ஆகவே பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண ஜனாதிபதி எடுக்கும் தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்றார். (4-7)

## வரலாற்றுச்...

நேற்று நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாயில் திறப்பு விழாவில் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மரபுரிமைகளைப் பாதுகாப்பதென்பது முக்கியமான அவசியமான பணியாகவுள்ளது. சமகால வரலாற்று நிகழ்வுகளை அது நிகழ்ந்த நாட்டிலே. பேணிக்கொள்ள முடியாத நிலையில் அயல் நாட்டிலும் வெளிநாட்டிலும் நினைவகங்களை அமைத்துக் கொண்டிருக்கின்றோம்.

இன்றுள்ள சூழலில் வரலாற்று சின்னங்களுக்கு உருவங்கள் மாற்றப்படுகின்றன. அவற்றைப் பாதுகாக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பண்டைய பிரயத்தனம் மேற்கொள்ளப்படுகிறது. எனவே எமது சின்னங்களை பாதுகாத்தால்தான் எதிர்காலச் சந்ததிகளுக்கு கடத்த முடியும்.

அண்மையில் காலிக் கோட்டையில் இருக்கும் அடையாளச் சின்னங்களை பார்வையிட்டேன். அங்கு நயினாதீவிலிருந்து கொண்டு செல்லப்பட்ட கல்வெட்டொன்று காணப்பட்டது. அப்போது நான், அதை நாம் பாதுகாக்க தவறிவிட்டோம் என எண்ணினேன்.

வீதியோரங்களில் காணப்படும் கட்டடங்கள், சுமைதாங்கிகள், ஆவுரஞ்சிக்கற்கள் போன்றன அபிவிருத்திகளின் போது அகற்றப்பட்டுவிட்டன. பல அகற்றப்படத் தயாராகவுள்ளன.

வரலாற்றுப் பாடப்புத்தகங்களில் எமது வரலாறு எமது சந்ததிக்கு எந்தளவு பொறிக்கப்படுகின்றது என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும் கவலையான விடயம். கல்விப் புலம் சார்ந்தவர்கள் எமது சந்ததிக்கு இதை அறிய உத்தியோகபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எந்தக் காரியங்களைச் செய்தாலும் விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டும் என்பதை கடந்த ஆறு மாத காலத்தில் அறிந்து கொண்டேன். எது எவ்வாறாயினும் இவ்வாறான மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது எனத் தெரிவித்தார். (4-7)

## 29...

காப்பு அமைச்சர் திரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அவர்களில் 24 ஆயிரத்து 285 பேர் சாதாரண முறைமையின் கீழ் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதாகவும், ஒரு நாள் சேவையின் மூலம் 5,294 பேர் சமர்ப்பித்துள்ளதாகவும், பொது பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை பிரதேச செயலகங்களினால் ஒன்லைன் முறையின் ஊடாக வழங்கும் வேலைத் திட்டம் கடந்த மாதம் 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் பத்தரமுல்ல குடிவரவு குடியகல்வு திணைக்கள அலுவலகத்திற்கு முன்பாக காணப்பட்ட நீண்ட வரிசை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

## தேங்காய்...

மேலும் சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை 120 ரூபாயாக அதிகரித்துள்ள போதிலும், ஒரு தேங்காய் 55 ரூபாய்க்கு வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை 100 முதல் 120 ரூபாய் வரை விற்பனை செய்வதாக தெரிவிக்கப்படுகின்றது. (4-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

லக்கி 7 லக்
திகதி 16.07.2023
சீட்டிழுப்பு இலக்கம் 003
L7 இலக்கம் 3 8
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
தனுசு 6 7 3 5 5 3

தன நிதானய
திகதி - 2023.07.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1207
W 22 28 40 41 W
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.07.16
சீட்டிழுப்பு இலக்கம் 3419
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
T 49 67 74 80
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 16/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1525
Y 17 08 37 77 79

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.16
சீட்டிழுப்பு இலக்கம் 486
துலாம் 11 20 43 58 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/16
சீட்டிழுப்பு இலக்கம் 5177
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
U 8 7 1 2 1 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2151 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.16 தினம் ஞாயிற்றுக்கிழமை
04 28 31 76 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,534,436.40
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 01 22 38 69 P
DLB

சனிதா
திகதி 2023.07.16 வெற்றி வாரம் 4312 வர்ணம் இளஞ்சிவப்பு
23 24 45 53 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,215,756.00
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 25 39 48 67 U
DLB

சசிரி
350 2023.07.16 கபிலம்
வெற்றி இலக்கங்கள் 17 22 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,672,120/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3863 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.07.16 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 24 25 38 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,586,936/-
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 01 11 28 56
DLB

கப்ருக
திகதி 16.07.2023 வெற்றி வாரம் 1327 வர்ணம் மஞ்சள்
Z 07 26 31 36 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 417,433,604.20
கப்ருக "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 44 51 52 69 S
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோட்டிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 1977
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2023.07.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,879,422/-
01 06 14 36 O
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 10 21 42 76 N
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் உதவி செய்ய வேண்டும்

## கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கு இலங்கையை சேர்ந்த புலம்பெயர் தமிழர்கள், உள்நாட்டு தமிழர்கள் உதவிகள் செய்ய வேண்டும் என கலாநிதி ஆறு. திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கீரிமலை சிவபூமி முதியோர் ஆச்சிரமத்தில் சுந்தர கைலாச கட்டட திறப்புவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வை தலைமையேற்று உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா எமக்கு இந்த உதவியை செய்யவேண்டும் இதனை செய்ய வேண்டும், அதனை செய்ய வேண்டும் என ஏன் நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எமக்கும் உதவிகள் தேவை தான். ஆனால், இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் 200 ஆண்டு காலமாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து அடிமைகளாக உணவுகளின்றி பல வேறு துன்பங்களில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு உதவிகள் தேவை. எனினும், அவர்களுக்காக நாம் என்ன உதவிகளை செய்தோம்.

அவர்கள் தேயிலை, கோப்பி, கொக்கோ போன்றவற்றில் வேலைகளை செய்து இலங்கையின் பொருளாதாரத்துக்காக உதவுகிறார்கள். அத்தகையவர்கள் பல துன்பங்களுடன் அடிமை வாழ்வை வாழ்கிறார்கள் அவர்களுக்கு 1000 ரூபா வேதனம் கூட கிடைப்பதில்லை. அத்தகைய மக்களுக்கு தொடர்ந்து நாம் உதவிகளை செய்ய வேண்டும்.

இளம் பெண்பிள்ளைகள் முதல் வயோதிபர்கள் வரை பற்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் பல வைத்தியர்கள் பலர் உருவாகி வெளியேறுகிறார்கள். அவர்கள் இந்திய வம்சாவளி மக்களுக்கு வைத்திய சிகிச்சைகள் வழங்கி உதவ வேண்டும்.

புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளும் உள்நாட்டில் உள்ள வசதி படைத்தவர்களும் அந்த மக்களுக்கு உதவிகளை செய்து, அவர்களை காப்பாற்ற வேண்டும் எனத் தெரிவித்தார். (4-7)

# போக்குவரத்து பொலிஸாரை மோதிய மோ.சைக்கிள் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் கடமையில் இருந்த போக்குவரத்து பொலிஸாரை மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் பொலிஸார் காயமடைந்துள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இரவு இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் வீதிக் கடமையில் இருந்த போக்குவரத்து பொலிஸார் வீதியால் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றை வீதியின் குறுக்காக சென்று வழிமறித்த போது கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் போக்குவரத்து பொலிஸாருடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் போக்குவரத்து பொலிஸார் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் குறித்த மோட்டார் சைக்கிளின் சாரதி வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4.7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16288)

076 825 7716 (ஆகாஸ்)

**BIOGAS PLANT கட்டுமானம், கழிவு முகாமைத்துவம் தொடர்பான ஒருநாள் செயலமர்வு**

வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் (CCIY) ஒழுங்கமைப்பில் இலங்கை - தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் பொறியியலாளர்களால் வரும் சனிக்கிழமை (22.07.2023) BIOGAS கட்டுமானம் மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான ஒருநாள் செயலமர்வு நடைபெற உள்ளது.

BIOGAS கட்டுமானத்திற்கு அனுமதி பெற ஆர்வமுள்ள பொறியியலாளர்கள் மற்றும் BIOGAS கட்டுமானம், கழிவு முகாமைத்துவம் தொடர்பான அறிவை பெற ஆர்வமுள்ளவர்களும் இதில் பங்குபற்றிகொள்ள முடியும்.

(C-6930)

மேலதிக விபரங்களுக்கு

070 366 3604 / info@cciy.lk ஊடாக

CCIY இனை தொடர்பு கொள்ளவும்.

**Apex Travels**

எம்மிடம் சகல நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களை (flight Tickets) குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் - சென்னை

தினசரி விமான சேவைகள் இருவழிப் பயணச் சீட்டுக்கள் (Return Tickets)

67,000/= இலிருந்து...

20Kg + 5Kg பயணப் பொதியுடன்...

முன்பதிவுகளிற்கு Apex Travels

0777 597 598

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (16315)

**வீடு வாடகைக்கு**

வெள்ளவத்தையில் 42ஆவது லேன், No.3ம் இலக்கத்தில் இரண்டு அறை, இரண்டு குளியலறை குசுனியுடன் கூடிய அடுக்குமாடி வீடு நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு. (16314)

T.P:- 075 278 6033

**VILLAGE HOTEL JAFFNA EXPRESS**

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...

கட்டணம் - 2800/= (16033)

T.P:077 544 8503

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

**ஆலயத்திற்கு குருக்கள் தேவை**

மேற்படி ஆலயத்திற்கு குருக்கள் தேவைப்படுவதால் வர விரும்புவோர் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

077 604 7786 (C-6929)

யாழ் வீரசிங்க மண்டபத்தில்

இன்றுமுதல் 15.07.2023 - 06.08.2023 வரை

**ஆடி மாத ஆடை தள்ளுபடி**

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலை சிறந்த ஆடைகள்



திருமணப்பட்டுச் சாறிகள்

கொட்டன் சாறிகள்

சல்வார்கள்

சல்வார் துணிகள்

புத்தம் புது டொப் வகைகள்

மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடை தெரிவுகள்.....

(16313)

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம்

**இந்தியன் செலக்ஷன்**

காலம்: 15.07.2023 - 06.08.2023

இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்

(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

**சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி**

கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடன் பட்டின் வகைகள், அழகுசாதனப் பொருட்கள், மாஸ் வகைகள், குடை வகைகள், கவரின் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர் :

தே. கலைத்தாசன் (கரன்)

021 315 5900

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (கஸ்தூரியார் வீதி) யாழ்ப்பாணம். (16310)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.